விலை ரூபா 2-00 ★ 8 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 தை 14 ஐ-அவ் 5 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (27—1—85) இதழ் 343


## பிரிட்டிஷ் பிரதமர் ஏப்ரலில் வருவார்?

(கொழும்பு)

மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் விக்டோரியா நீர்த்தேக்கத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்காக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாக்கிரெட் தட்சர் எப்ரல் மாதம் இலங்கைவரவிருப்பதாக மகாவலி குடியேற்றப் பகுதியில் நடந்த நிகழ்ச்சியொன்றில் மகாவலி அபிவிருத்தி

[8-ம் பக்கம் பார்க்க]

# பலலட்சம் ரூபா நகைகள், ரொக்கம்

# யாழ். ஹற்றன் நாஷனல் வங்கியில் கொள்ளை!

(ஏ வி மாணிக்கம்)

யாழ்ப்பாணம் ஹற்றன் நாஷனல் வங்கிக் கிளையில் பலலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளும், ரொக்கப் பணமும் இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப் பட்டுள்ளன. ஐந்து பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் அங்குள்ள அறையொன்றுக்குள் பூட்டி வைத்துவிட்டு இந்தத் துணிகரக் கொள்ளை நடத்தப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம்மாலைஐந்து மணிக்கு சுமார் பதினைந்துபேர் வங்கிக் கட்டடத்துக்குள் நுழைந்து, நேற்று அதிகாலை வரை அங்கு தங்கியிருந்து தமது 'கைவரிசை'யை காட்டியுள்ளனர்.

நான்கு 'காஸ்' சிலிண்டர்களின் மூலம் உடைப்பு வேலை

(8 ம் பக்கம் பார்க்க)

## பஸ்ஸிலிருந்து இறக்கி சுடப்பட்டார்

[திருகோணமலை]

மூதூரில் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த இளைஞர் ஒருவர் சிலரால் இறக்கப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார்

ஓடிக்கொண்டிருந்த பஸ்சை இடைமறித்த சில இளைஞர்கள் பஸ்ஸில் பயணம்செய்த குணசேகரம் என்ற இளைஞரை கீழே இறக்கியதாகவும், பின்னர் அவர் சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடந்ததாகவும் கூறப்படுகிறது.

## ராணுவம் சுட்டதில் 3 இளைஞர்கள் பலி

[திருகோணமலை]

திருமலை-நிலாவெளி, கும்புறுப்பிட்டி ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்த ராணுவத்தினர் தேடுதல்வேட்டையின்போது மூன்று தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

தம்பிராசா இரத்தினசிங்கம் [35-வயது] கிருஷ்ணபிள்ளை நல்லலிங்கம்[36 வயது] செல்வநாயகம் சபாபதிப்பிள்ளை [38-வயது] ஆகியோரே கொலைசெய்யப்பட்டவர்களாவர்.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் கும்புறுப்பிட்டிப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடாத்தினர். அப்போது அவ்விடத்தில் காட்டுப்பகுதியில் மரம் வெட்டிக்கொண்டி

(8 ம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட அரச நில அளவையாளர்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க நில அளவையாளர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று நாளைக்காலை ஒன்பதரை மணியளவில் நடைபெறுகிறது

யாழ்ப்பாணம் நிலஅளவைக் கந்தோரில் நடைபெறும் மேற்படிக் கூட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக தத்தமது வேலைத் தலங்களுக்குச் செல்லமுடியாத அரசநில அள

(8 ம் பக்கம் பார்க்க)

## கல்லாறு வாவியில் இளைஞர்சடலங்கள்?

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாற்றில் கடந்த வியாழக்கிழமை பொலிஸ் அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் மேலும் பல இளைஞர்கள் சுடப்பட்டு கோட்டைக்கல்லாறு வாவியில் வீசப்பட்டிருக்கலாமென்று நம்பப்படுகிறது.

கோட்டைக் கல்லாறு கிராமத்தில் பொலிஸ் அதிரடிப் படையினர் மேற்கொண்ட சோதனைகளின்போது பலஇளைஞர்களைக் காணவில்லையென்று பெற்றோர்கள் தெரிவித்துள்ளனராம். இந்த இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம். அல்

(8 ம் பக்கம் பார்க்க)

## 5 ஜெனரேட்டர்கள் அபகரிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் நகரிலுள்ள வர்த்தக நிறுவனமொன்றில் நேற்றுக்காலை ஐந்து 'ஜெனரேட்டர்கள்' இனந்தெரியாத துப்பாக்கி இளைஞர்களினால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. (சூ)

## ஆசிரியர் இடமாற்றம் தொழிற்சங்கங்களுக்கு எச்சரிக்கை

[கொழும்பு]

அடுத்த மாத முதல் வாரத்தில் ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றம் அமுல் செய்யப்படும் என்று கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினர் சட்டத்தரணி க ஜெயக்குமார் தெரிவித்தார்.

ஆசிரியர்களின் வருடாந்த இடமாற்றப் பட்டியல் தயாரிக்கும் பொறுப்பு கல்விச் சேவை ஆணைகுழுவிடமே இருப்பதாகவும் திரு ஜெயக்குமார் தெரிவித்தார்.

(8 ம் பக்கம் பார்க்க)

## கொலை!

[யாழ்ப்பாணம்]

யாழ். அரசடி வீதியில் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான இருவரின் மரணம் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது கடந்த 4ம் திகதி யாழ். வீதி அரசடியில் காசிப்பிள்ளை ஞானசேகரம் (வயது 23), கதிர்காமர் தாமோதரம்பிள்ளை (வயது 64) ஆகியோர் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

இவர்களது மரண விசாரணையை பதில் நீதிவான் க கேசவன் நடத்தி கொலை எனத் தீர்ப்பளித்தார். (மா)

## இலங்கை பிரச்னைகுறித்து 'தடைம்ஸ்'கருத்து

# வடக்கில் உணவுப் பஞ்சம் விரைவில் ஏற்படும்!

''இலங்கையில் சிறுபான்மை இனத்தவர்களான தமிழ்மக்கள்வாழும் தமிழ்ப் பகுதிகளில் ராணுவ கெடுபிடிகள் அதிகமாக இருப்பதனு அந்தப்பகுதிகளில் பொருளாதாரம் பெருமளவு பாதிக்கப் பட்டிருக்கிறது,''

சர்வதேச சஞ்சிகையான 'கூ டைம்ஸ்' இலங்கை பிரச்னை குறித்து வெளியிட்டிருக்கும் கட்டுரைஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறது.

அந்தக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: ''வடபகுதியின் கடல்பிரதேசங்கள் தடைசெய்யப்பட்ட பகுதிகளாகப் பிரகடனப்படுத்தப் பட்டிருப்பதையடுத்து, சுமார் 25 ஆயிரம் மீனவர்கள் தொழில்வாய்ப்புகளை இழந்திருக்கின்றனர் தற்போது அந்தப் பகுதிகளில் உணவு விநியோகங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் விரைவில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டு மக்கள் பட்டினியால் பாதிக்கப் படுவார்கள்என்று அஞ்சப்படு

[8-ம் பக்கம் பார்க்க]

## காங்கேசன் துறைமுகத்தில் கொள்ளை

[யாழ்ப்பாணம்]

காங்கேசன் லங்கா சிமெந்து நிறுவனத்துக்குச் சொந்தமான துறைமுக களஞ்சியத்திலிருந்து இரு 'அவுட போட்'

(8 ம் பக்கம் பார்க்க)

## ராணுவம் சோதனை

[கிளிநொச்சி]

கிளிநொச்சி பட்டின சபை அலுவலகம், பொது நூல் நிலையம் ஆகியவற்றை நேற்றுக் காலை சுற்றிவளைத்த இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரணைசெய்ததுடன் பலத்த சோதனையும் நடத்தினர்

## வல்லை மதகுகள் தகர்க்கப்பட்டன

[யாழ் - கோப்பாய் நிருபர்கள்]

வல்லைப் பாலத்தின் வடக்கு-தெற்குப் பக்கங்களிலுள்ள இரு மதகுகள் சீருடை அணிந்தவர்களால் நேற்றுமுன்தினம் பிற்பகல் தகர்க்கப்பட்டது. இதனால் வடமராட்சிப் பகுதிப் பிரயாணிகள் பெருத்த பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் கவசவாகனத்தில் வந்தவர்களே குண்டு வைத்து இத்தகர்ப்பு வேலையை நடத்தியுள்ளனர்.

[8ம் பக்கம் பார்க்க]

## யாழ். பிரஜைகள்குழு மகஜர்

# 'அரசு அணுகும் முறையால் நிலைமை மோசமாகிறது!'

(கொழும்பு)

'இலங்கைத் தமிழர் பிரச்னையை அரசாங்கம் அணுகும் முறையினால் நாளுக்கு நாள் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலைமை மோசமடைந்து வருகின்றது. இந்தநிலை தொடருமாயின் நாட்டில் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாம்' என்று தமிழ்ப் பகுதிகளின் பிரஜைகள் குழுக்களின் கூட்

(8 ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

2½ பரப்புக்காணி வீடு கட்டுவதற்கு சங்குவேலியில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். திருமதி மா. விஜயரட்ணம், சங்குவேலி, மானிப்பாய். 1534

பாவனையில் உள்ள Sony கலர் T. V 20 அங்குல NV-600 வீடியோ டெக், புத்தம்புதிய 6 Cu. Ft. Freezer- Hoover Floor Polisher- Neceehi தையல் மெசின், Slide Projector Music Centre, 'ரலி' ஸ்போட்ஸ் சைக்கிள், எவ்வயதினரும் பாவிக்கக்கூடிய மடித்தல் சைக்கிள், Kennel (நாயின் கூடு) ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு 23: சென்ற் பீட்டர்ஸ் லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1498

Peugeot 504 டீசல் கார், சில முக்கிய உதிரிப்பாகங்களுடன் உடன் விற்பனைக்குண்டு 23, சென்ற் பீட்டர்ஸ்லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1499

உரும்பிராய் யுனிப்கோவுக்கு பின்னால் இரண்டரைப்பரப்புக் காணிஉடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:வெற்றிவேல், வேம்பன் வீதி, உரும்பிராய்தெற்கு, உரும்பிராய். 1527

கொண்வென்றுக்கு அருகாமையில் மாட்டீன் ரோட் ஒழுங்கையில் 1½பரப்பில் வசதியான வீடும், முற்றிலும் மறுசீரமைக்கப்பட்ட 1 சிறீ மொறிஸ் மைனரும் உடனடி விற்பனைக்குண்டு. யோசப், மிருக வைத்தியர், யாழ்ப்பாணம். 1528

நல்லூர் கந்தசாமி கோவிலிலிருந்து 300 யார் சுற்று வட்டாரத்தில் 1½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்; K. வேலாயுத பிள்ளை, 441 (பழைய நம்பர்) K. K. S. வீதி, யாழ்ப்பாணம். 1508

Toyota Hiace RH 20 உடன் விற்பனைக்குண்டு. சிறிய வாகனங்களுக்கும் மற்றலாம். 51, செட்டித்தெரு குறுக்கு வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், 1555

Pure Breed Alsation Black and Tan 4½மாத பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. P. மனோகரதாசன் நவாலி தெற்கு, மானிப்பாய். 1551

ஆனைக்கோட்டையில் நவாலி ரோட், மானிப்பாய்ரோட் சந்திக்கருகாமையில் ஐந்து பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; P கனகரத்தினம், 37(71) கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 1554

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா அல்லது சாவகச்சேரியில் சுல்தான் அப்துல் காதர் சகோதரர்கள் அல்லது கண்டி வீதி, கிளிநொச்சி. 1314

## சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகியகாலத்தில் Processing And Printing செய்துகொள்ள நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ. யாழ்ப்பாணம். 1511

## வாடகைக்கு

சகல வசதிகளுடன் இரண்டு படுக்கை அறை, குசினி கொண்ட வீடு ஒன்று வாடகைக்கு உண்டு 204 மானிப்பாய்வீதி ஒட்டுமடம் யாழ்ப்பாணம். 1515

## தேவை

சாவகச்சேரியில் நவீன சந்தையிலுள்ள தையல் கடைக்கு பெண்களின் உடைகள் வெட்டத்தெரிந்த பெண்கள்தேவை. நேரில் வரவும் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும். சுகிர்காமன்ஸ் 72,1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 1550

யாழ்ப்பாணத்து உயர் குலத்தைச்சேர்ந்தவரும் அரச களஞ்சியப் பொறுப்பாளருமான 27 வயதான கத்தோலிக்க இளைஞருக்குப் பொருத்தமான மணமகள் தேவை நகரில் வீடும் ரொக்கமும் எதிர்பார்க்கப்படும். விளம்பர இல: 1552 C/o ஈழநாடு. 1552

## தவறிவிட்டது

பூபாலசிங்கம் புத்தகக் கடைக்கு அண்மையில் எனது முக்கியமான கணக்குப்புத்தகமும், இன்னும் சில தஸ்தாவேசுகளும் சிறிய கைப்பையுடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் திருப்பிக்கொடுத்தால் தகுந்தசன்மானம் அளிக்கப்படும் மு.மாணிக்கவாசகர், 122, ஆஸ்பத்திரி வீதி, டெலிபோன்: 2311, மரக்கறி மார்க்கட்டின் முன். 1556

## FOR SALE

Tricrty electic cooker-four rings Grill and oven, 48 Bass Piano Accordian Meakin's English Dinner set, Lanka Parcelain Tea set, Pyrex dishes ete for Sale. 155, Second Cross Street, Jaffna. 1538

## பருத்தித்துறை ப.நோ.கூ.சங்கம்(வ/து)

## வெற்றுச் சாக்கு ஏல விற்பனை

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் களஞ்சியத்திலிருக்கும் சுமார் 10,000 வெற்றுச் சாக்குகள் இனவாரியாக எதிர்வரும் 29-1-85 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு களஞ்சியத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலக்கூற்றில் வெற்றிபெறுவோர் ஏலத்தில் பெற்ற பொருட்பெறுமதியை உடனே சங்கக் காரியாலயத்தில் கட்டி ரசீது பெற்றுத் தமக்குரிய பொருட்களை உடனே ஏற்றிச் செல்லுதல்வேண்டும்.

1985-01-24

பொதுமுகாமையாளர்

1543

## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

## வெற்றுச் சாக்கு கேள்வி அறிவித்தல்

எமது சங்கத்தில் 3050 வெற்றுச்சாக்குகள் கேள்விமூலம் விற்பனைக்குண்டு.

முடிவுத் திகதி: 28-01-85

பதில்பொதுமுகாமையாளர்
127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்,
25-1-85. 1548

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## முத்தையன்கட்டு கொலை முயற்சி: இரு எதிரிகள் பிணையில்

(வவனியா)

முத்தையன்கட்டு கொலை, கொலை முயற்சி, கொள்ளை வழக்கில் இரண்டாம், மூன்றும் எதிரிகளான சாவகச்சேரி மட்டுவில் தெற்கைச் சேர்ந்த சிவகுரு திருச்சிற்றம்பலம், இராமசாமி மனோகரன் ஆகிய இருவரையும் தலா ஐயாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றத்துக்கு வவனியா மேல் நீதிமன்றத்தால் அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளது.

கடந்தவருடம் மார்ச் 9-ம் திகதி அன்று முத்தையன் கட்டைச் சேர்ந்த கூட்டுறவு வங்கி முகாமையாளர் வேலாயுதபிள்ளை பொன்னுத்துரை வீட்டில் 24 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததாகவும் அவரை கொலை செய்ய எத்தனித்ததாகவும் அவரது வேலையாள் நாகநாதனைக் கொலை செய்ததாகவும் சு. தங்கவடிவேல், சி. திருச்சிற்றம்பலம் இ. மனோகரன். ஆ. சிவலிங்கம் ஆகிய நால்வருக்கெதிராக ஒட்டுசுட்டான் பொலிசார் தாக்கல் செய்த வழக்கு விசாரணை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

எதிரிகளின் சார்பில்சட்டத்தரணி திரு. கனக மனோகரன் ஆஜரானார்.

எல்லாநாடுகளுக்கும் செல்வதற்கான
சகல பிரயாண ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்
பேர்ளின் (BERLIN) செல்வதற்கு
ரூ. 14.500/00 — நிகர (Nett)
அமெரிக்கன் லொயிட்
(சிலோன் வரையறுக்கப்பட்டது)
AMERICAN LLOYED
CEYLON LTD.

151, தர்மபால மாவத்த
கொழும்பு-07
தொலைபேசி;
20344, 26911, 28347

W-4, 5ம் மாடி
சிலிங்கோ ஹவுஸ்
கொழும்பு-1, தொலைபேசி:
24494, 28892, 29806

பிரயாண ஒழுங்கு பிரதிநிதிகள்
யாழ்ப்பாணம்:- பொதுமுகாமையாளர், வின்சர் திரையரங்கம்,
ஊர்காவற்றுறை:- திரு. S.A.E. இரட்ணராஜா,
சில்லாலை:-வைத்தியகலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி,
பருத்தித்துறை;- வண. S. S. கருணைராஜ், மெதடிஸ்ற் குருஸ்தானம்.
(1375)

T.C.C.
குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதி அற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்ருக்ரேஸ்
அன் கொன்சல்ரன்ஸ்

தலைமை அலுவலகம்:-
69, சங்கிலியன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

64, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

## அந்தியேட்டி அழைப்பும நன்றி நவிலலும்



தோற்றம்: 23-3-1905

மறைவு: 29-12-1984

கந்தசாமி சின்னம்மா

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற திரு. வ. மு கந்தசாமியின் அன்பு மனைவி சின்னம்மா அவர்களின் அந்தியேட்டிக்கிரியை 31வது நாளான 28-1-85 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இதில்கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம். அவரது இறுதிச் சடங்கில் பங்குபற்றியோர், உதவிகள் வழங்கியோர் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இங்ஙனம்

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'பத்மாலயம்'
வல்வெட்டித்துறை. 1542

## 'இவர் செய்த குற்றமென்ன?' துண்டுப் பிரசுரம் வினவுகிறது

[யாழ்ப்பாணம்]

'குடும்பத்தாராலும், சமூகத்தினராலும், நண்பர்களாலும் நேசிக்கப்பட்ட மார்க்கண்டு சற்குணராசா (பணம்) கடந்த 20ம் திகதி காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் ஆரியகுளம் சந்தியில் இறந்து கிடக்கக் காணப்பட்டார் சமூகத்தில் மதிப்புமிக்க இவர் வெளிநாடுசென்று திரும்பியவர் 32 வயதான இவர் செய்த குற்றம் யாவை என்பது தெரியப்படுத்தவில்லை. இக் கோரக் கொலைக்கான காரணத்தை இக்கிராமவாசிகள் அறிய விரும்புகிறார்கள்.'

இவ்வாறு கூறும் துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப்பட்டுள்ளது. 'இவர் என்னகுற்றம் செய்தார்? யார் இந்தக் கொலையைச் செய்தது?' என்ற தலைப்பில் இப்பிரசுரம் வெளிவந்துள்ளது

## காவலூர் வர்த்தகர்கள் நிதி உதவி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அகதிகளுக்கு உதவுவதற்காக ஊர்காவற்றுறை வர்த்தகர்களிடம் சேகரித்த ரூபா ஐயாயிரத்தையும் ஊர்காவற்றுறை பிரஜைகள் குழுவினர் அகதிள் புனர்வாழ்வுக்கழகத்திடம் கையளித்துள்ளனர்.

ஊர்காவற்றுறைப் பகுதியிலுள்ள பல்வேறு கிராமங்களிலும் இவ்வகதிகளுக்கு உதவுவற்கெனத் தொடர்ந்து பொருட்களைச் சேகரிப்பதில் பிரஜைகள் குழுவினர் ஈடுபட்டுள்ளனர்.

## சுண்டுக்குளி பிரஜைகள் குழு

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி பிரஜைகள் குழுவின் தலைவராக திரு. ஜே ஏ. செபஸ்தியாம்பிள்ளையம், உபதலைவராக திரு. க. செல்லக்கண்டுவும், செயலாளராக திரு எஸ். சிவராசாவும். பொருளாளராக திரு சி. இராசசூரியரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்தவங்கியில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நீக்க யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், ஊழியர்கள், மாணவர்கள் நேற்று முன்தினம் இரத்தத்தானம் செய்தார்கள். (க)

## புங்குடுதீவு விநாயகனுக்கு கொடியேற்றம்

தொன்மைமிக்க வரலாற்றைத் தன்னகத்தே கொண்டு, புங்குடுதீவு மத்தியில் திருக்கோயில்கொண்டு ஆத்மகோடிகளுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் வரசித்தி விநாயகர் ஆலய கொடியேற்றம் இன்று நண்பகல் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

தொண்டர்கள்கூடி வரசித்தி விநாயகனுக்கு ஆண்டுதோறும் விழா எடுக்கிறார்கள் இத்திருவிழா புதுவருடம் பிறந்ததும் ஆரம்பமாவது திருவிழாக்களுக்குள் சிறப்புடையது

இவ்வாலயம் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் சிறிய குடிசையிலே காணப்பட்டது அதன் பிற்பாடு 1979ம் அண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது இதனைத் தொடர்ந்து இவ்வாலயத்தில் நிர்வாகசபையின் பெருமுயற்சியினால் பல திருப்பணிகளை நிறைவேற்றிவருகின்றனர்

—த. சிவகுமாரன்

## எமது சிறுகதை

நாகராசன், அப்பொழுது தான் வெளியே போய்வந்து விறுந்தையில் கால்களை வைத்தான்.

''என்னப்பா இண்டைக்காவது ஏதும் வழி கிடைச்சுதா...'' இவ்வாறு திருவாய் மலர்ந்தருளினள் அவனது பத்தினி புனிதம் [illegible]

''ஊ...ம்...ஹ ு... ம...'' என்றவாறே கைகளில் சுமந்து வந்த 'பைல் கட்டுகளை மேசை மீது வைத்துவிட்டு நிமிர்ந்தான் அவன்.

''இப்பிடியே எண்டால் எப்பிடி...'' -நலிந்த குரலில் கணவனை இரக்கத்தோடு பார்த்து இழுத்தாள் புனிதம்.

''நான் என்ன செய்யிறது புனிதம்... என்னால் முடிஞ்ச வரைக்கும் அலைஞ்சுதான் பாக்கிறன்...''- சொல்லிக்கொண்டே அணிந்திருந்த அந்த நீளமான 'நெஷனலை' கழற்றித் தொங்கவிட்டான்.

''ஊருக்குள்ளையும் எத்தின நாளைக்கெண்டு கடன் வாங்கிறது... நாளைக்குத் தாறன்... நாளேண்டைக்குத்தாறன் எண்டு சொல்லிவாங்கினதுகள் கூடக் குடுக்க வழியில்லை... இன்னம் ஊருக்க எத்தின பேரிட்டை இப்பிடி என்னைக் குட்டுப்படச் சொல்றியள்...'' தொண்டை கரகரக்கக் கூறி முடித்தாள் புனிதம்.

நாகராசன் எங்கேயோ வெறிக்கப் பார்த்துக்கொண்டே சொன்னன்:

''புனிதம் நீயும் எனக்கு மனைவியாக வந்து கஷ்டப்பட வேண்டியாயிட்டுது... நானுந்தான் நாயா அலைஞ்சு பாக்கிறன். ஒரு குட்டிச் செய்தியாவது கிடைக்கமாட்டேங்குது... இப்பிடியே தொடர்ந்து ஒரு செய்தியும் அனுப்பாவிட்டாலும் இப்போதைக்கிருக்கிற இந்தத் தொழிலும் போயிடும் ...அதுக்காகவெண்டாலும்ஓடியாடித் திரிஞ்சால் எங்கை... ஏமாற்றந்தான் மிச்சம்...''

கணவன் விரக்தியோடு சொன்ன இந்த வார்த்தைகளை கேட்டு நின்ற புனிதத்திற்கு மேலும் அங்கே நின்று அவனது மனத்தைக் குத்திக்குடைய விருப்பம் இல்லாதவளாக வீட்டினுள்ளே நுழைகிறுள்.

●

புனிதம் நாகராசனை விரும்பிக் கைபிடித்துக் கொண்டவள். ஆரம்ப காலத்தில் நாகராசன் பத்திரிகைகளுக்குக் கதைகள், கட்டுரைகள் எழுதி அனுப்பிக் கொண்டிருந்ததில் ஊருக்குள் அவனுக்கு எழுத்தாளன் என்ற பெயரும், புகழும் நிலைக்கத் தொடங்கியிருந்தன.

அந்தக் காலத்தில் ஊருக்குள் எத்தனையோ பெண்கள் அவனையே கணவனுக்கிக் கொள்ள வேண்டுமென்று போட்டி போட்டுக் கொண்டதில் வெற்றி பெற்றவள் இந்தப் புனிதந்தான்

ஏழை எழுத்தாளனை வாழ்க்கைத் துணைவனுக்கிக் கொண்டால் இத்தகைய வாழ்க்கையைத்தான் அனுபவிக்க நேரிடுமென்று அப்பொழுது இந்தப் புனிதத்திற்கென்ன எல்லாப் பெண்களுக்குமே தெரியாது தான் அந்த வகையில் நாகராசனை அடைய போட்டி




போட்டுத்தோல்வியை அடைந்தவர்கள் தப்பித்துக்கொண்டார்கள்.

புனிதத்திற்கு எத்தனையோ சோதனைக்கட்டங்கள் தோன்றிப் பல நாட்கள் உணவே கிடைக்காமல் வாடி இருக்கிறுள் என்றுலும் கணவன் ஒரு எழுத்தாளன், பத்திரிகை நிருபர் என்ற பூரிப்பு ஒன்றே அவளுடைய வெறுவயிற்றை நிரப்பிவிடுமென்றுல் அது நூற்றுக்கு நூறு உண்மை.

அதனுலேயே எந்தவிதப் பட்டும் கணவனைப் பட்டினி போடாமல் அயலட்டையில் இத்தனை நாட்களாக இரவல் வாங்கிச் சமைத்துப் போட்டான். இன்றைக்கோ அவளுக்கே நாகராசன் மீது வெறுப்பு வருமளவிற்கு ஆகிவிட்டது. என்றுலும் காட்டிக்கொள்ளாமல் வீட்டுக்குள் நுழைந்து தனது போதாக் காலத்தை நினைந்து குலுங்கிக் குலுங்கி கலங்குகிறுள்.

●

நாகராசன் இப்பொழுது பத்திரிகைகளுக்குக் கதைகளோ கட்டுரைகளோ எழுதுவதில்லை புனிதத்தை திருமணம் செய்துகொண்டகாலத்திலிருந்தே அதைவிட்டு விட்டான். நிரந்தரமான உழைப்பொன்றைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடனே ஒரு பத்திரிகைக் கந்தோரில் நிருபராகச் சேர்ந்து பணியாற்றி அதால் வரும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கை ரதத்தை இதுவரை காலமும் ஒருவாறு செலுத்தி வந்துவிட்டான்

இந்த இரண்டொரு மாதங்களாக அவனுக்கு ஒரு புதினமும் நல்லதாகக் கிடைக்கவில்லை தரமான புதினங்களை அனுப்பிவைத்தாற்தான் தலைப்புச் செய்திகளாக இடம் பெற்று அவனுக்குத் தகுந்த ஊதியத்தை வேலைபார்க்கும் பத்திரிகைக் கந்தோரிலிருந்து பெற்றுக்கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

சென்ற மாதத்திலும் இவனுடைய செய்திகள் குறைவாகவே பத்திரிகைக் கந்தோருக்குக் கிடைத்தன. அதனுல் அவனுடைய மாத வருவாயில் பெரும்பகுதி குறைந்தே இம்மாதம் கைகளில் கிடைத்தது. இந்தமாதமும் செய்திகள் கிடைக்காது போனுல் அடுத்த மாதத்தில் வீட்டுச் செலவுக்குப் போதாத சம்பளமே அவன் கைக்கு வந்து சேரும்.

சென்ற மாதத்துக் கடன்களோடு இந்த மாதத்துக் கடன்களும் சேர்ந்து விட்டால் இந்த ஜென்மத்திலேயே அந்தக் கடன்களை திருப்பிக் கொடுக்க அவனுல் முடியாது போய்விடும். முன்னரைப் போல் அவ்வப்போது கதை கட்டுரைகளை எழுதிக் கொண்டிருந்தாலும் அவனுக்கு அந்த வகையாலும் கொஞ்சநஞ்சம் தேறிக் கைகொடுக்கும்.

●

''புனிதா... புனிதா...'' ஏதோ நினைத்துக் கொண்டவன் திடீரென்று குரல் கொடுத்ததும் புனிதமும் உள்ளேயிருந்து ''ஏதாவது வழி கிடைத்து விட்டதோ'' என்ற எண்ணத்துடன் விறுந்தைக்கு விரைந்தாள்.

''என்னப்பா...''

''புனிதா உன்னைக் கல்யாணம் முடித்ததிலிருந்துதான் கதைகள் எழுதுவதையும் விட்டுப் புதினம் எழுதத் தொடங்கினன்...''

''ஓம் அதுக்கிப்பஎன்ன...''

''மீண்டும் நான் கதையெழுதப்போறன்... அதுக்குத்தான்...''

''சொல்லுமப்பா''

''ஒரு பீடித்துண்டிருந்தால் கொண்டாவன்...'' அவன் குழந்தைப் பிள்ளையைப்போல் அவளைப் பார்த்துக் கேட்டதும் அவளுக்குப் பரிதாபமாக இருந்தது. அவள் இப்போ பீடித்துண்டுக்கு எங்கே போவாள்?

பக்கத்துவீட்டுப் பரிமளத்தைக்கூப்பிட்டு அவளது கணவன் பாவனைக்கு வாங்கிவைத்திருந்த பீடிகளில் ஒன்றைக் கடனக வாங்கிவந்து கொடுத்தாள். நீண்டநாட்கள் சாப்பிடாமல் இருந்தவன் சாப்பாட்டைக் கண்டதும் விழுந்தடித்து வாரி எடுத்து உண்பது போல் அவள் கையிலிருந்த பீடியைப்பறித்து வாயில்வைத்துப் பத்திப் புகையைக் கக்கிக் கொண்டே பேனவை எடுத்துக் கிறுக்கத் தொடங்கினன்

ஆரம்பவரிகளைப் போட்ட அவனுக்குத் தொடர்ந்து எழுதவே முடியவில்லை. மூளையைப் போட்டு முறுக்கிப் பார்த்தான். நீண்ட நாட்களாகக் கதைகளையே சிந்திக்காமல் இருந்தவனுக்கு திடீரென்று எப்படிக் கற்பனை தோன்றும்?

அவனுல் இந்த ஏமாற்றத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. திரும்பத் திரும்ப முயற்சித்துப் பார்த்தான். 'நூத்துவைத்திருந்த பீடிக்குறளை மீண்டும் எடுத்துப் பத்த வைத்துப் புகையை வெளியே சுருள் சுருளாக விட்டுச் சிந்தனையையும் தட்டிவிடுகிறுன். பலன் முயற்கொம்புதான்!

இவைகளைக் கவனித்துக்கொண்டிருந்த புனிதத்திற்கு மேலும் அங்கு நிற்கப் பிடிக்கவில்லை. அவளுடைய சிந்தனைகள் இப்பொழுது வேறுபக்கத்தை ஈர்த்திருந்தது. 'சற்று நேரத்தில் எல்லாம் பள்ளிக்கூடம் விட்டுப் பசியோடுவரப் போகும் கின்னஞ்சிறுசுகளுக்கு எப்படிப் பசியை ஆத்தப் போகிறேனே' என்ற ஏக்கத்தில் முன்னிருந்ததில் கொஞ்சம் இளைத்துவிட்டாள் அவள்.

விறுந்தையில் நாகராசனின் போராட்டம் தீர்ந்ததாக இல்லை. குப்பைக் கூடை நிரம்பிவிட்டது. எழுதும் கடதாசியின் விலையைச் சிந்தித்துப் பார்த்தவன் மேலும் எழுதுவதை நிறுத்திக்கொண்டான்.

''என்னங்க...'' புனிதம் வந்துவிட்டாள். நிமிர்ந்து அவளைப்பார்த்த நாகராசன் வாயைத் திறக்காமலே செய்கையால் என்ன என்று கேட்கிறுன்.

''நாங்கதான் பசியைப் பொறுத்துக் கொள்வம்... கொஞ்சத்தில பள்ளிக்கூடத்தால வரப்போறதுகளுக்கு என்னத்தைக் குடுக்கிற...''

தலையில் கையைவைத்து 'ஐயோ' என்று கத்த வேண்டும் போல் நாகராசனுக்குத் தோன்றியது. குற்றத்தைச் சிந்தித்து சமாளித்துக் கொண்டான். புனிதம் சொல்வதிலும் நியாயமிருக்கிறதை நினைத்த போது அவனுக்கு வெட்கம் உடலை அரித்தது.

''எதையாவது செய்துஇந்த நேரத்தை சமாளித்துக்கொள் புனிதம்... உன்னுடைய சாமர்த்தியத்தை இந்த நேரத்திலாவது எனக்கு உதவியாகப் பயன்படுத்தன்... வேறையென்ன செய்கிறது. ஒருக்கா உதால போய்ப்பாத்திட்டு வாறன...''

நிருபர் நாகராசன் கதிரையைவிட்டெழுந்து தொங்கப்போட்டிருந்த 'நெஷனலை' தூக்கிப் போட்டுக்கொண்டு 'பைல்' கட்டுக்களை எடுத்து நெஞ்சோடு அணைத்தவாறு வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினன், இவற்றைப் பார்த்து நின்ற புனிதம் மனதுக்குள் சிரித்துக்கொண்டவளாக அவன் போகும் அழகை ரசித்துக்கொண்டே நின்றுள்.

●

நாயா அலைந்த நாகராசனுக்கு நாய் மனிதனுக்குக் கடித்த செய்தி கூடக் கிடைக்கவில்லை. அவன் முன்னே இளமங்கை ஒருத்தி துடியிடை துவழ ஒயிலாக நடந்துகொண்டிருந்தாள்.

மனைவி, மக்கள் பசியோடு வாடுவதை ஒருதடவை நினைத்துப் பார்த்துக் கொண்டான். சமாளித்துக்கொள்ள முடியாததால் துணிந்து மேற்கொள்ளப் போகும் காரியத்தில் கண்களை மூடிக்கொண்டு இறங்கியேவிட்டான் அவன்.

அயலூராதலால் நடந்த சம்பவங்கள் அவனுடைய மனைவிக்கோ, அவனைத் தெரிந்தவர்களுக்கோ எட்ட நியாயமில்லை வெளியே சென்ற கணவன் பெருமிதத்தோடு வீடுவந்தடைந்ததைக்கண்ட புனிதத்திற்கு உள்ளம் நிறைந்துவிட்டது.

அடுத்தநாள் அவன் வேலை பார்க்கும் பத்திரிகையில் நாகராசன் அனுப்பிய செய்தி ஒன்று முன்பக்கத்தை அலங்கரித்த போதுதான் புனிதம் கணவனின் செய்தி வேட்டை எந்தளவுக்கு விஸ்தீரணம் அடைந்திருக்கிறதென்று சிந்தித்தாள்.

''வாலிபக் கிழவரின் வால்தனம் அம்பலம்! வாலைக்குமரியிடம் வகையாக வாங்கிக்கட்டினார்!!''

—இதுதான்செய்தித்தலைப்பு

''என்னப்பா இண்டைக்கு நீர் அனுப்பியிருக்கும் செய்தி மெத்தப் பிரமாதம்... இப்பிடியே நாளுக்கொரு செய்தி கிடைத்திட்டால்...எங்களுக்கு கஷ்டமே வராது''

புனிதம் சொல்லி முடித்ததும் ஒரு தடவை அலகைத் தடவிக்கொண்டவனய் நாகராசன் கண்கள் பிதுங்க விழித்தான். அவளுக்கு எங்கே தெரியப் போகிறது; செய்தி அனுப்பிய நாகராசனே செய்தியாகி இருக்கும் உண்மையை?

''புனிதம் நானெரு முடிவுக்கு வந்திட்டன்... இதெல்லாம் ஒண்டும் நிச்சயமானதில்லைப் புதினம்... அதனுல் எங்களுக்குத் தந்த காட்டுக்காணி மூண்டுஏக்கரேயும் இனிநானே வெட்டிக்கொத்தி விதைக்கப் போகிறன்... அதனுல் தான் நாங்க இனி விடிவைக்காண முடியும்...''

நிருபர் நாகராசன் திடமாகச் சொன்னதைக் கவனித்த புனிதத்தால் நம்புவதற்கு எளிதில் இயலவில்லை; என்றுலும் அவளால் அதற்கு மறுப்பு ஏதும் சொல்லவும் முடியவில்லை.

நிருபரான அவனுக்குத் தெரியாததா அவளுக்குத் தெரிந்துவிடப்போகிறது?

(யாவும் கற்பனை)

---

## விடியுமுன்

## பிரிந்தாய்.

கல்லயிலே இறையைக் கண்டாய்
இறையிலே நிறைவைக் கண்டாய்
நிறைவிலே எதனைக் கண்டாய்
நித்திய ஒளியே கண்டாய்

விடியுமுன் பிரிந்து சென்றுய்
விடிவுக்காய்ச் சென்றுய் நீயே
மடிவினுல் மீட்புச் செய்த
கிறிஸ்துவின் வழியிற் சென்றுய்

குருவோடு குருவாய் இன்றிக்
குருவுக்குக் குருவே ஆனுய்
இருளோடு வாழும் பாரில்
இனியதாம் ஒளியைச் செய்தாய்

— அ. அமிர்தராஜ்

[அண்மையில் மரணமடைந்த வண.பிதா. மேரி பஸ்ரியன் நினைவாக]

---

## கல்யாணம் நடந்தது

இருக்க ஒரு வீடும்
இரு வைரத் தோடும்
இரண்டுலட்சம் காசும்
இவைதான் சீதனம்
பெண்பார்க்க வந்தனர்
பேசாமல் சென்றனர்
காரணம் கேட்டதும்
கட்டைப்பெண் என்றனர்
மாதமொன்று சென்றது
மணமேடை வந்தது
மணமகனும் அவர்தான்
மணமகளும் அவள்தான்
மேலும் ஒரு லட்சம்
மேலதிக சீதனம்
கட்டை மறைந்தது
கல்யாணம் நடந்தது

'யோகி'

---

ஒருத்தி: எங்கள் வீட்டில் எல்லாம் இருக்கு, ஒன்று மட்டும் இல்லை.


மற்றவர்: என்ன இல்லை?

ஒருத்தி; சந்தோஷமில்லை.

—கேசரி

# தொடர் நவீனம்

## பூம்பனிமலர்கள்



மனிதப் பண்புகள்மறைந்து கடைச்சரக்காகிவிட அதர்மம் தலைதூக்கிறது. மனித மனம் பிழைபட - இயற்கையும் ஒழுங்குமுறையைத்தன் இஷ்டத்துக்கு மாற்றிக்கொண்டதோ.....?

மழைகாலம் இல்லாவிடினும் நாலுநாட்களாக மழைமூட்டம் காட்டி மாரியெனப் பொழிந்தது!

அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய கலா மழையில் நனைந்ததால் தலையைத்துவாயால் துவட்டி கேசக்கற்றையைப் பரப்பி உலரப்பண்ணியிருந்தாள்.

மழைவிட்டு விட்டது. ஆனாலும் தூற்றல் இருந்தது.

வெளிவிறுந்தையில் கதிரையில் அமர்ந்து தோட்டத்தையே வெறித்துப்பார்த்துக் கொண்டிருந்தாள் கலா.

சிவபாக்கியம் உள்ளே குசினியில் அலுவலாய் இருந்தாள். ஒரு வாரத்திற்கு மேலாக இருவரும் .பேச்சு வார்த்தைகள் வெகு மட்டாக வைத்துக்கொண்டனர்.

இருவரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுவதாக உள்ளுக்குள் எண்ணிக் குமைந்து ஒருவரோடு ஒருவர் பேசுவதை வேணுமென்றே தவிர்த்துக் கொண்டார்கள்.

''கலா...!''

— அழைத்தது சிவபாக்கியம். வெகு சன்னமாக ஒலித்தது அவளின் குரல்

எடுத்ததற்கெல்லாம் சதா அம்மா அம்மா என்று வளைய வரும் கலா ஒரு வாரத்துக்கு மேலாக அம்மா என்று அழைக்காமலே இருந்துவிட்டாள். கலாவுக்கு வேண்டுமானுல் பிடிவாதம் நீடிக்கலாம். ஆனுல் சிவபாக்கியம்... அவள் பெற்ற தாய். அந்த வைராக்கியத்தை அவளால் கடைப்பிடிக்கவும் முடியவில்லை; அதைத் தாங்கவும் முடியவில்லை.

கலா நிமிர்ந்து பார்த்தாள். கறுத்து, களைத்து மெலிந்திருந்தது கலாவின் முகம். தான் சண்டை பிடித்தமையினுல் தன் மகள் மனம் வாடி, முகம் வாடிவிட்டாள் என்று சிவபாக்கியம் தன்னுள்ளே கழிவிரக்கம் கொண்டாள்.

''இந்தா இதைச்சாப்பிடு.''

அரிசிமா கொழுக்கட்டை! கலாவுக்குப் பனம்கட்டி போட்ட கொழுக்கட்டை என்ருல் கொள்ளை ஆசை. அவள் அதை மறுக்கவில்லை. கையை நீட்டினுள். சிவபாக்கியம் கலாவின் அருகில் வந்து கலாவின் வாயில் கொழுக்கட்டையை வைத்தாள். மௌனமாக ஒன்றைச்சாப்பிட்டாள். அது மதுரமாக இனித்தது. ஆனுல், கலாவின் இதயத்தை ஏதோ ஒன்று வந்து அடைக்க, குப்பென்று வெளி வந்தது கண்ணீர்.

தாயின் முகத்தைப் பார்த்தவள், கண்ணீருடன் தன் முகத்தைக் குனிந்துகொண்டாள்.

''கலா ..!''- தாயின் மனம் ஏங்கியது. ''ஏன் மகளே அழுகிருய் ?''கொழுக்கட்டையை வைத்துவிட்டு, கலாவின் முகத்தை நிமிர்த்தினுள் அன்னை.

''அம்மா ..!''

—அணை திறந்தாற்போல் வெடித்தது அழுகை! அவளது தாபம், ஏக்கம், கவலையெல்லாம் கண்ணீராய்ப் பிரவாகித்தது.

''ஏன் அழுகிருய், கலா?... இப்ப என்ன நடந்தது ..?''

''அம்மா... அம்மா ... நான் செய்ததுபிழைதான்? என்னை மன்னித்துக் கொள்ளுங்கோ!''

''கலா, எழும்பு! எழும்பி முகத்தைத்துடை! -தாய் கலாவின் கண்ணீரைக்கண்டு மனம் வாடினுலும், அவளுக்கு இப்ப சரியான, வலுவான வழிகாட்டி ஒன்று நிச்சயம் தேவை என்பதை உணர்ந்தாள்.

தான் பிழைவிட்டு விட்டதாகக் கூறி, மன்னிப்புக்கோரும் மகளை மன்னிக்க அவள் தயாராய் இருந்தாள்.

மழை மூட்டம் நன்ருக விடுபட்டு வானம் தெளிவாக இருந்தது.

கலாவின் இதயம் இலேசாகி இருந்தது சிவபாக்கியத்துக்கு மிக மகிழ்வாக இருந்தது.

''அவள் சிறுபிள்ளை. தெரியாத்தனமாய் நடந்து விட்டாள்! ஆரோ பாழாய்ப் போனவர் மனசை மாத்திப் போட்டான்..''

தான் முதலில் நினைத்திருந்த எண்ணத்தைச் செயலாக்க முனைந்தாள் சிவபாக்கியம்.

முள்ளியவளையில் ஆசிரியராக்கடமையாற்றும் சிவராசாவின் ஜாதகம் .பொருத்தம் பார்க்கப்படுகிறது.

''நல்ல பொருத்தம்...! ஆவணி மாதம் எழுத்து வைப்பதற்குத் தகப்பனுக்குச் சம்மதம்... பெடியனும் இந்தக் கிழமை லீவில வரவேணும்! இஞ்சை ஒருக்கா வந்தாலும் வருவினம்...''

தாய் கூறுவதைக்கலா கேட்டுக்கொண்டிருந்தாள். ஒரு விதமான உணர்வையும் முகத்தில் அவள் காட்டவில்லை. அவளது மௌனத்தைப்பூரண சம்மதத்தின் அறிகுறி என்று சிவபாக்கியம்எண்ணிக்கொண்டாள்.

கலாவின் மனம் அசைபோட்டது

அவள் நினைத்தது என்ன... நடக்கப்போவது என்ன... தனது பட்டப்படிப்புக்கு ஒரு டாக்டர் அல்லது பொறியியலாளரே தன் எதிர்காலக்கணவனுய் .வரவேண்டுமென்று எவ்வளவு கனவு கண்டாள்!

●

அவளின் மனம் அழுதது.

அவள் கண்ட எதிர்காலக் கனவுகள் யாவும் பொய்யாயினவா?

அவளின் மனம் சிலிர்த்துக் கொள்கிறது. தன்னைவஞ்சித்த பிரேமகாந்தன் மீது. ஏன் இந்த ஆண்கள் முழுப்பேரிலுமே அவளுக்கு ஒரு வெறுப்பு தோன்றுகிறது;

தான் என்றுமே பிழைவிட்டது இல்லை; தன்னைப் பிரேமகாந்தன் ஏமாற்றி விட்டான் என்ற நினைப்பே அவள் மனமெல்லாம் வியாபித்துநின்றது.

பாவம்... தனது எதிர்பார்ப்புக்களை மூட்டைகட்டி வைத்துவிட்டுத்தாயின் விருப்பத்துக்கு ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியனுக்குக் கழுத்தைநீட்ட அவள் இலேசில் மனம் மாறியவளாய் காணப்படவில்லை.

சதா பித்துப் பிடித்தவள் போல் அவள் காணப்பட்டாள் அவளின் இரண்டும்கெட்டான் நிலையைச் சரிவரப்புரியமுடியாமல் தாய் சிவபாக்கியம் தன்னுள் கிடந்து மறுகினுள்.

''என்னடி கலா என்ன நடந்தது திடீரென்று உனக்கு ஒரு கிழமை லீவும் போட்டு, வீட்டில என்னடி செய்தனி?''

மிஸிஸ் சிவசம்பு சிரித்தபடியே கலாவை நோக்கிக் கேட்டாள்!

''ராஜேஸ்...''

கலாவினுல் மேற்கொண்டு பேசமுடியவில்லை.விம்மல்தான் வெடித்தது. கண்ணீர் குழக்கென்று கன்னக் கதுப்பில் உருண்டது.

என்ன கலா... இதென்னடி...''—

மிஸ் சிவசம்பு திடுக்குற்றவளாய்க் கேட்டாள்.

''ராஜேஸ் கொஞ்சம் வெளியே போவம் ...உனக்குக் கதைக்க வேணும்...'' —தன் கைக்குட்டையால் முகத்தை அழுத்தித் துடைத்தாள் கலா.

''நாங்கள் ஒருக்கா வெளியில போட்டுவாறம் சேர்... ஏடி கூப்பிட்டால் சொல்லுங்கோ. ''— மிஸிஸ் சிவசம்பு எஸ்ஏயைநோக்கிக் கூறினுள்.

''கலா, தனது கைப்பையை எடுத்துக்கொண்டு வாசலை நோக்கியபடியே நின்ருள்.

எஸ் ஏ.கலாவையும்,மிஸிஸ் சிவசம்புவையும் ஏறிட்டு நோக்கினுர்,

''வெளியில போகவோ... கெதியாய்வாங்கோ...தற்செயலாய் ஏ. டி. வந்தால் தேடுவார்...!''

''நாங்கள் கெதியில வாறம் சேர்...!''

இருவரும் போய்விட்டனர்.

எஸ் ஏ எழுந்து மெதுவாக பரமசிவத்தின் மேசைக்குச் சென்ருர். பரமசிவம் வாயில் வெற்றிலையை அமுக்கி மிக ரசனையோடு சப்பிக்கொண்டே ஏதோ ரைப்பண்ண ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்.

''என்ன பரமசிவம் பார்த்தாயே ; மிஸிஸ் சிவசம்பு தான்வெளியிலபோறதெண்டு சொல்லுரு...! மற்றவ கெப்பரில எங்கேயோ பார்த்துக் கொண்டு நிற்கிரு... இவளவைக்கு என்ன செய்ய வேணும்...?''

''உதுக்கு நாங்கள் என்ன செய்யமுடியும் எஸ்ஏ'' அவள் சிவபெருமான் கழுத்துப்பாம்பு எண்டு நான் உங்களுக்கு முந்தியே சொல்லியிருக்கிறன்... விடுங்கோ கதையை...,'

''அது சரியடாப்பா... எண்டாலும் இவளின்ரைசேட்டையை நினைக்கத்தான்...'' வார்த்தையை இழுத்தபடியே பேசாமல் தனதுகதிரையில் வந்துஅமர்ந்தார் எஸ்ஏ.

அந்த விடுதி அமைதியாய் இருந்தது. கிறிஸ்தவப் பெண்களுக்கான விடுதி உணவுக்காலை மிகவும் சுத்தமாயும், அமைதியாயும் இருந்தது

கலாவும் மிஸிஸ் சிவசம்புவும் ஒரு மூலையில் அமர்ந்து கவுண்டரில் எடுத்து வந்திருந்த கோப்பியை ஆறுதலாகப்பருகினர்.

மடை திறந்தாற்போல் தனது பிரச்னைகளைக்கொட்டி அழுதாள் கலா.

(வளரும்)

10

---

# காவியகாலமும் நாவல் இலக்கியயுகமும்

(முன் தொடர்ச்சி)

'எட்மண்ட்கோசே' நாவல் என்றசொல் இயல்பான உலகனுபவங்களை ஒட்டிச் செல்லும் இலக்கிய வகையைக் குறிக்கும் என்ருர். மாதவையா (பத்மாவதி சரித்திரம்) ''உலக வாழ்க்கையைக் கண்ணுடி போற் பிரதிபலித்துப்பெரும்பாலும்அநுபவத்தோடொத்து நிகழும் கதைகளை நாவல்என்று கூறுவார்'' என்பர். கமலாவதி எழுதிய தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை ''உலகானுபவத்தையொட்டி இக்கதைகளை எழுதத்துணிந்தேன். இது நாவலின் ஜீவன் என்று குறிப்பிட்டார் தேக்கரே என்ற மேனுட்டுப் புதின ஆசிரியர் பாத்திரப் படைப்புப்பற்றிக் கூறியதொரு கருத்துச் சிந்திக்கற்பாலது.

''என்னுடைய கதையில் தோன்றும் பாத்திரங்கள் மேல் நான் ஆட்சி செலுத்துவதில்லை. அதற்கு மறுதலையாக அப்பாத்திரங்களே என்னை ஆளுகின்றன. அவைகள் எங்கு வேண்டுமோ அங்கு என்னைச் செலுத்துகின்றன. அப்பாத்திரங்களின் உரையாடலிற்கூட யான் பங்குகொள்வதில்லை. பலசந்தர்ப்பங்களில் ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்த பின்னரும் ஓர் உரையாடல் நிகழ்ந்த பின்னரும் யானே அது நிகழ்ந்த முறையைக்கண்டு இறும்பூது எய்துவதுண்டு'' [அ. ச. ஞானசம்பந்தன் இலக்கியக்கலை பக்கம்] இதிலிருந்து நாவல்களிலிடம்பெறும். உரையாடல்கள் நாவலாசிரியனை யறியாமலே நிகழும் பாத்திர சிருஷ்டியின் குணவிசேடமாகவும் வளர்க்கப்பெறும் நவீன உணர்வுப் (Modern Sense) பாத்திரங்களாகவும் விளங்குகின்றன. பாத்திர சிருஷ்டியில் சமகால வாழ்வு பேசும் பாத்திரங்களும் அகவாழ்விலும் புறவாழ்விலும் இயல்பான நாம்அறிந்த சாதாரண நிகழ்ச்சிகளையும் அன்ருடம் காணக்கூடிய பாத்திரங்களும் காணப்படுகின்றன.

சமூக நாவல்கள், வரலாற்று நாவல்கள், மேல்நாட்டு வாழ்க்கையைக் காட்டும் நாவல்கள், மனோதத்துவ நாவல்கள், மர்ம நாவல்கள் என்று பலதரப்பட்ட வகையினவாயினும் கல்வி, ஓய்வு ஒத்த அனுபவ உணர்வ என்பன பொதுபபண்பாக உள்ள சமூகத்தில் இவை பெருமளவு செல்வாக்கினைப் பெறுகின்றன. கு. அழகிரிசாமி சொல்வது போன்று நாவலில் காலத்தின் தனித்துவம் களத்தின் தனித்துவம், பாத்திரத் தனித்துவம் உண்டு. தி ஜானகிராமன் கூறுவது போன்று

## காவியம் நாவல் ஒப்பீடு

''கதை சொல்லும்போது காரணத்தை உய்த்துணரவைக்கும் தன்மையுடையது. நாவல் என்பது முற்றிலும் பொருத்தமானதே. ஏர்னஸ்ட் பேக்கர் கதைசொல்லுவது என்பது உண்மைகளை விவரிப்பதாக அமைந்தது. Factual Details என்றும் The Interpretation of Human Life By Means of Ficturc prose) தனித்தனி குணங்களுள்ள மனிதனைப் பொதுவான சமுதாய அச்சுக்குள் தள்ளிவிடாது தனிமனித உணர்வுகளினூடே காணும் பண்பு நாவலுக்குண்டு. நாவல் மறுபக்கத்தையும் விசாரித்துத் தீர்ப்புக்கூறுகிறது- நீதிவழங்குகிறது. Danial Diffo பற்றி Richard church கூறும்போது சூழலின் சான்றுகளை தீர ஆராய்ந்து புனைகதைகளின் சிகரமாகப் படைத்தலில் வெற்றிபெற்றுள்ளார். என்று (He Nearly Presented in Facts Fact was in Fashion) என்று கூறுவார்.

ஆரம்பகால நாவல்கள் முதல் அண்மைக்காலப் 'புதுமெருதபெற்ற' நாவல்கள் வரை மனிதர்களுடைய ஒழுகலாறுகளைப் பரிசீலனைசெய்தல்; வித்தியாவிஷயப்; புத்திக்கூர்மை; குயுக்தி, உத்தி; விதவா விவாகம, உடன்கட்டை, பாலியவிவாகம்; சீதனம்: ஆண்-பெண் உடலுறவு என்பனவும், அரசியலில், நீதி, சட்டம் என்பனவும் உள்ளுறையாக இடம்பெற்று வந்துள்ளமை சமுதாயத்தை நாவல் எந்தளவுதூரம் கூர்ந்து அவதானிக்கிறதென்பதைத் தெளிவாக்குகின்றது. சுருங்கக்கூறின் பேராசிரியர் கைலாசபதி அவர்கள் கூறுவது போன்று 'உலகில் மனித சிந்தனைக்கு உட்படும் பொருள் அனைத்தும்

கனகசபாபதி நாகேஸ்வரன்
(துணை விரிவுரையாளர் தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

நாவலுக்கு ஏற்றனவே' என்பது புரிந்துகொள்ளவேண்டிய விஷயம். காவியங்களைப் போன்று கருத்துக்களைக் கருத்துக்களாகவே காணுமல், பாத்திரங்களின் வாழக்கை நிலையிலேயே தோன்றும் வாழ்க்கைத் தத்துவயாக- நுணுக்கவிபரச் சித்திரிப்பாகக் கண்டமைந்தமையினுலேயே நாவலாசிரியன் அவனை அறியாமலே வெற்றியடைகிருன்.

### நாவலின் சமூகப்பணி

மொத்தத்தில் பல்வேறு அறிவுத்துறைகளுப் இலக்கியத்தைப் பாதிக்கும் யுகம் இது. இக் காலத்தில் இலக்கியம் தனித்தியங்குதல் சாலாது.

(6ம் பக்கம் பார்க்க)

# தஞ்சை பல்கலைக்கழகத்தில்

# பண்டிதர் வீரகத்தியின் பணி

கேள்வி; தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் பற்றிச் சுருக்கமாகக் கூறுவீர்களா?

பதில்; 1981ம் ஆண்டு மதுரையில் இடம்பெற்ற ஐந்தாவது உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது தஞ்சைப் பல்கலைக்கழகம் நிறுவுவது பற்றித் தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி இராமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதன்படி பல்கலைக்கழகத்தின் தலைமைப்பீடம் தஞ்சாவூரில் அமைந்தது. அதன் கிளைகளாக காஞ்சியிலும் சென்னையிலும் இராமேஸ்வரத்திலும் ஊட்டியிலும் துறைகள் அமைந்தன. தலைமைப்பீடமாகிய தஞ்சையில் மொழியியல் மையமும் [மையம்-துறை] காஞ்சியில் தத்துவமையமும் சென்னையில் களஞ்சிய மையமும் இராமேஸ்வரத்தில் கடல் ஆய்வு மையமும் ஊட்டியில் மலைவாழ்நர் ஆய்வு மையமும் உள்ளன. பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் வ.ஐய். சுப்பிரமணியம்.

கேள்வி; தாங்கள் எப்படி பல்கலைக்கழக மொழியியற் துறையிற் சேர்ந்தீர்கள்.

பதில்; இலக்கணம், சைவசித்தாந்தம், திருக்குறள் ஆகியவை பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு விண்ணப்பித்திருந்தேன். அவர்கள் இலக்கணம்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு என்னை எடுத்திருக்கிருர்கள்.

கேள்வி; மொழி வளர்ச்சிக்கு இலக்கணம் தேவைஇல்லை என்பவர்களும் இருக்கிருர்களே! நீங்கள் ஏன் இத்துறையை எடுத்தீர்கள்.

பதில்: தங்களுக்குப் புரியாதது புரியமுடியாதது எல்லாம் தேவை இல்லை என்பவர்களை நான் அறிவேன். இது ஒரு மனுேவியாதிதத்துவம். இலக்கணம் வேண்டுமென்பது எனக்கு நன்ருய்த் தெரியும் அதனுல் அந்தத்துறையை விளக்கவேண்டும் என்பது என்விருப்பம். இலக்கணம் வேண்டாமென்பவர்களுக்குக் கணிதமும் பௌதிகமும் போகாது. ஆனுல் அதற்காக அவை வேண்டாமென்று அவர்கள் சொல்வதில்லை.

கேள்வி; இலக்கணத்தில் நீங்கள் ஆராயும் பகுதி?

பதில்: வீரசோழியம்தொடக்கம் இன்றுவரை இலக்கணத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றி ஆராய்ந்துகொண்டிருக்கிறேன்.

கேள்வி: ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டிருப்பவர்களை முதல்நிலை ஆய்வாளர் [Jnnior Research fellow] இடைநிலை ஆய்வாளர் [Senior Research fellow] என்று பிரித்திருக்கிருர்கள் நீங்கள் எந்தப் பிரிவு.

பதில்; நான் முதல் நிலை ஆய்வாளனும் இல்லை. இடைநிலை ஆய்வாளனும் இல்லை. சிறப்பாய்வாளன் [Special Research fellow]

கேள்வி: ஏன் உங்களுக்குத் தனிச்சிறப்பு.

பதில்: அது பல்கலைக்கழகத்தைத்தான் கேட்கவேண்டும்

கேள்வி: மொழி இயற்றுறையின் தலைவர்.

பதில்; டாக்டர் அரங்கன். இவர் இலக்கண மொழியியல் நிபுணர். இவருக்கு உதவியாக டாக்டர் கே பாலசுப்பிரமணியம் டாக்டர் ஆரோக்கியசாமி ஆகியோர் இருக்கிருர்கள்.

கேள்வி; நீங்கள் தஞ்சாவூரில் தானே இருக்கிறீர்கள்.

பதில்; தொடக்கத்தில் தஞ்சாவூரில் இருந்தேன் இப்போது காஞ்சியில்.

கேள்வி: காரணம்?

பதில்; ஒன்று இருப்பிட வசதி. இரண்டு காஞ்சியின் மகத்துவம் மற்றது மாதவசிவஞான சுவாமிகள் இருந்து இயல் துறைக்கும் சமயத்துறைக்கும் சிறப்பாக இலக்கணத்திற்கும் இந்திய தருக்கத்துக்கும் ஒளி கொடுத்த இடம் அல்லவா காஞ்சி

கேள்வி: இதுவரை உங்கள் ஆராய்ச்சி எந்த மட்டத்தில் இருக்கிறது?

பதில்: மட்டம் வரவர உயருகிறது,

கேள்வி: துணைவேந்தர் உங்களுக்கு வேண்டிய வசதிகளை அமைத்துக் கொடுத்திருக்கிருரா?

பதில்: துணைவேந்தர் டாக்டர் வ. ஐய். சுப்பிரமணியம் அவர்கள் என்மீது தனிக் கவனம் செலுத்தி வருகிருர். எல்லா வசதிகளும் செய்து கொடுத்திருக்கிருர்

கேள்வி: ஒரு பல்கலைக்கழகத்தின் வெற்றியில் பெரும்பங்கு அதன் பதிவாளரில் தங்கிஇருக்கிறது என்கிருர்கள் அப்படியானுல் தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்?

பதில்: தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் திரு கிருட்டினமூர்த்தி அவர்கள், அவர் மிக ஆழ்ந்த அறிவாளி உயர்ந்த பண்பாளர் நேர்மை மிக்கவர் சுறு சுறுப்பாக எப்போதும் இயங்குபவர் துணையேந்தருக்கு வலது கரமாக தொழிற்படுவர்.

கேள்வி: பல்கலைக்கழக நூல் வெளியீட்டுப் பகுதியின் பணி பற்றிக் கூறுவீர்களா?

பதில் :பல்கலைக்கழக நூல் வெளியீட்டுத்துறை மிகச்சிறப்பாக இயங்குகிறது பல்கலைக்கழக வெளியீடாக

1. மராட்டியர் செப்பேடுகள்

2 கலித்தொகை - இ. வை. அனந்தராமையர் பதிப்பு

3. ஆராய்ச்சித் தொகுதி மு.இராக வையங்கார்

4 சங்க இலக்கியத்தில் கட்டுரைகள் — கருத்தரங்கம்

5. தொல் — சொல் — தெய்வச் சிலையார் உரை

6. தொல்காப்பியம் - நன்னூல் - சால்லதிகாரம் க. வெள்ளைவாரணர்

7. நன்னூல் காண்டிகை - ஆறுமுகநாவலர் முதலிய நூல்கள் வெளிவந்துள்ளன இவற்றுள் ஆறுமுகநாவலர் ஐயாவின் நன்னூல் காண்டிகை உரை வெளிவந்துள்ளது எனக்குப் பெரும் மகிழ்ச்சி

கேள்வி: நீங்கள் தமிழ்நாட்டில் இலக்கிய கர்த்தாக்களைச் சந்திபபதில்லையா?

பதில்: நான் இலக்கிய கர்த்தாக்களைச் சந்திப்பதில்லை ஆறுமுகநாவலர் அவர்கள் சைவ விஞவிடையிற் கூறும் கர்த்தாவைத்தான் அடிக்கடி சென்று தரிசிப்பேன்:

கேள்வி: சென்னையில் உங்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி உண்டா?

பதில்: உண்டு. கைலாசபதியின் நூல்கள் சென்னையில் எம் ஏ தேர்வுக்குப் பாடநூலாக வைத்தமை.

கேள்வி: சென்னையில் பிரபலமான இலங்கைச் சஞ்சிகை ஆசிரியர்?

பதில்! சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரத்தைக் குறிப்பிடலாம், சிரித்திரன் சஞ்சிகைக்கு அங்கு நல்ல வரவேற்பு.

கேள்வி: நீங்கள் ஓராண்டு காலம் முடிந்ததும் திரும்புவீர்களா?

பதில்: சொல்ல முடியாது. வேறு பல்கலைக்கழகங்களிலும் வாய்ப்பு ஏற்படலாம்.

கேள்வி; இங்கு திரும்பும் நேரத்தில் இங்கு எத்தகைய பணியை மேற்கொள்வீர்கள்?

பதில்: கீரிமலையில் அல்லது அந்தணத்திடலில் வாணிகலைக்கழகத்தைப் 'புனரமைப்புச் செய்து பணிபுரிவேன். கருகம்பனை அ. கதிர்காமத்தம்பி அவர்கள் அந்தப் பணிக்குப் பொறுப்பாக இருப்பார்,



பண்டிதர் க. வீரகத்தி அவர்களின் இலக்கியப் புலமையும் இலக்கணத் தெளிவும் ஈழத்து அறிஞர்களால் மட்டுமல்ல தமிழகத்து அறிஞர்களாலும் வரவேற்கவும் மதிக்கவும் பெறுவன. கல்லூரி ஆசிரியராகவும், வாணி கலைக்கழக நிறுவுநராகவும் இருந்து ஈழத்திற் பெரும் பணிபுரிந்த இவர் இன்று தஞ்சைப் பல்கலைக்கழக மொழியியற்றுறைப் பிரிவில் இலக்கண ஆய்வு நிகழ்த்தி வருகிருர். இவர் சிறந்த பேச்சாளர் என்பதும் இனிய கவிஞர் என்பதும் நல்லாசிரியர் என்பதும் தமிழ் உலகு அறியும்.

★ சந்தித்து எழுதியவர்:

**புலவர் ம. பார்வதிநாதசிவம்**

## தலைவலியா?

தலைவலி தாங்க முடியவில்லையா? கவலை வேண்டாம். எருக்ராம்பூ, சிறிது சீரகம், இரண்டு மிளகு - இவற்றைப் பசும்பால் விட்டு அரைத்து நெற்றியில் பூசிக்கொள்ள தலைவலி பறந்துவிடும்.

— சித்த வைத்தியம்

## லிப்ஸ்டிக் என்ன செய்யும்?

ஆழ்ந்த சிவப்பு வண்ணம் ஆண்களைக் கவரும்.

பளபளப்பான (Glossy) நிறம் ஆண்களைத் தூரத்தே வைக்கும் அதாவது இதுபெண்களைக் காட்சிப்பொருளாக, தொடக்கூடாத வஸ்துவாகத் தோற்றுவிக்கும்.

வெளிர் நிறங்கள் மென்மையானவராக, பழகுவதற்கு இனியவராகஉயர்ந்த பண்பாளராகக் காட்டும்.

கெட்டி நிறங்கள் திடசித்தத்தையும் கம்பீரத்தையும் எடுத்துச் காட்டும்.

நன்றி: 'மங்கை'

## நினைவில் நிறைந்த அரசியலார் சிலர் 9

தமிழ்மக்களுக்குச்சமபலப் பிரதிநித்துவம் கோரி திரு ஜி.ஜி. பொன்னம்பலம் தொடர்ந்து பல மணிநேரம் நிகழ்த்திய உரைக்கு 1939ஆம்ஆண்டு மார்ச் மாதம் 21ஆந் தேதி அமைச்சர் என்ற முறையில் திரு எஸ். டயிள்யு ஆர். டி. பண்டாரநாயகா பதிலவித்துப் பேசினுர்.

திரு ஜி ஜி. நீண்ட நேரம் ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கையில் இதற்கு முன் இச்சபையில் சேர். பொன. இராமநாதன் நீண்ட உரையாற்றி நிகழ்த்திய சாதனையை இப்பொழுது பருத்தித்துறைத் தொகுதிப் பிரதிநிதி (ஜி ஜி) முறியடித்திருக்கிருர் என்று குறிப்பிட்டபோது இடையே ஒரு உறுப்பினர் குறுக்கிட்டு ஏதோ கூறியதும் அந்த சாதனையை முறியடிக்கவில்லையென்று கூறி சேர் பொன் இராமநாதன் ஒரேநாளில் தொடர்ச்சியாக ஒன்பது மணிநேரம் சிங்கள மக்களுக்கெதிராக இழைக்கப்பட்ட அநீதிகளை எதிர்த்துப் பேசினுரென்றும் ஆனுல் திரு ஜி.ஜி.சபைக்கூட்டத்தை ஒத்திவைக்கக் கேட்டும் களனி கங்கை நீரை அலகணக்கில் குடித்தும் உரையாற்றியிருக்கிருர் என்று கிண்டல் செய்தபோதிலும் திரு ஜி ஜி யின் உரைக்குப் பதிலளிப்பதற்கே தமது நேரத்தைச் செலவிட்டார்

சர்வசிங்கள
மந்திரி சபை

இரண்டாம் அரசாங்க சபையின் நிர்வாக சபைகளின் தலைவர்களான மந்திரிமாரைத் தெரிவதற்கான ஒழுங்குகள் மேற்கொளளப்பட்டபோது திரு. ஜி.ஜி. பொன்னம்பலம் எடுத்த நடவடிக்கைதான் இலங்கையில் சர்வசிங்கள மந்திரி சபை அமைவதற்குக் காலாக இருந்தது. இதை திரு எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகாவே அரசாங்க சபைகக்கூட்டத்தில் திரு.ஜி.ஜி யின் உரைக்குப் பதிலளித்துப் பேசுகையில்விளக்கிக் கூறினுர்.

''மந்திரிமாரைத் தெரிவு செய்வதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்பாக இச்சபையின் குழுக்களின் அறையொன்றில் அங்கத்தவர்கள் குழுவொன்றின் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டம் கௌரவ ரூவான்வல உறுப்பினர் (டாக்டர் என்.எம். பெரேரா) தலைமையில் நடைபெற்றது அக் கூட்டத்தில் நானும் கலந்து கொண்டேன். நீங்களும் (சபாநாயகர்) கலந்துகொணடீர்களென நினைக்கிறேன். இக்கூட்டத்தில் சிங்கள உறுப்பினர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர். சிறுபான்மையினர் சிலரை மந்திரிமார் சபைக்குத் தெரிவு செய்ய வாக்களிக்க வேண்டுமென்ற உறுதியான தீர்மானத்துடன் இவர்கள் வந்திருந்தனர். இந்த உண்மைக்கால சான்று என்னிடம் உண்டு இதற்கு எனது நண்பர் உப சபாநாயகர் [திரு சுசந்தா டி பொன்சேகா] எடுத்துக்காட்டுவார். மற்றும் உறுப்பினர்களும் அங்கு என்ன நடந்தது என்ற எனது கூற்றை ஆதரிப்பார்கள். இக்கூட்டத்தில்பருத்தித்துறைத் தொகுதி உறுப்பினர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்) துள்ளி எழுந்து ஒரு நிபந்தனை விதித்தார். என்ன நிபந்தனை? அக் கூட்டத்தில் தீர்மானம் எடுப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட முதல் பிரேரணை நாங்கள் வேறு எது பற்றியும் தீர்மானிப்பதற்கு முன்னதாக என்ன தான் நடந்தாலும் இரண்டு தனிப்பட்ட உறுப்பினர்களும் (சபை முதல்வர் சேர். டி. பி. ஜயதிலகா கௌரவ விவசாய அமைச்சர் டி. எஸ், சேனநாயகா) மந்திரிமார் சபைக்குத் தெரிவு செய்யப்படுவதிலிருந்து ஒதுக்கப்படவேண்டும்.

''இதுதான் அந்தக் கூட்டத்தில் எந்த அமைச்சுக்கு எவர் தகுதியானவர் என்பது பற்றி ஆராயுமுன்னரே எல்லாவற்றுக்கும் முன்னதாக கொண்டு வரப்பட்ட பிரேரணையாகும். ஒற்றுமையாகச் செயல்படுவதற்காகக் கூடிய அக்குழுக் கூட்டத்தில்முன்வைக்கப்பட்ட நிபந்தனை இது. இத்தீர்மானம் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது என்று கூறிய திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் தங்களில் பலர் அக்கூட்டத்திலிருந்து வெளியேறியதாகவும் இதன் விளைவாகவே சர்வசிங்கள மந்திரிசபை அமைய நேரிட்டது என்றும் விளக்கம் தெரிவித்தார். (ஆதாரம்; டுவார்ட்ஸ் ஏ நியு எரு)

சர்வசிங்கள மந்திரி சபை பற்றி திரு. க. சி. குலரத்தினம் தமது நோத் முதல் கோபல்லாவரை என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிருர்.

''இரண்டாம் அரசாங்க சபையின் நிர்வாக சபைகளின் தலைவர்களாக மந்திரிமாரைத்தெரிவதற்கான ஒழுங்கின் பூர்வாங்கஏற்பாடுகளுக்கு முன் தோழர் என். எம்.


(6ம் பக்கம் பார்க்க)

# அரசசபையில் வாதாடியபின்

# நகரசபையில்

# ஜிஜி. தலைமையுரை

**எஸ். எம். ஜி.**



சாள்ஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் ருவிஸ்ற்

தமிழில்: 'பேனு'

"உஸ், உஸ் திருவாளர்! சைக்ஸ்! சத்தம் போடாதே" என்று கெஞ்சினுன். நடுங்கும் குரலில் யூதன். "நீ ஒன்றும் என்னை திருவாளர் போட்டு அழைக்கவேண்டாம். சும்மா என் பேரைச்சொல்லியே கூப்பிடு" என்முன் அந்த போக்கிரி சைக்ஸ்

'சரி சரி - பில்சைக்ஸ், இன்றைக்கு ஏனே கடுகடுப்பாய் இருக்கிருய் பில்!, என்முன் பேஜின்

"ஒருவேளை அப்படியே இருக்கலாம்" என்று கூறிவிட்டு ஒரு கிளாஸ் மது தரும்படி கேட்டான். "அதில் நஞ்சைக்கலந்துவிடாதே தெரிந்ததா!" என்முன்

ஒலிவர் ருவிஸ்ற் எவ்வாறு பொலிசில் பிடிபட்டான் என்ற விபரத்தை அந்த இரு பிக்பாக்கட் திருடர்களும் பில் சைக்ஸிடம் விளக்கிஞர்கள்-

"அவன் ஏதாகிலும் தாறுமாருகக்கூறி நம்மை எல்லாம் மாட்டிவைத்து விடுவானே என்று பயமாய் இருக்கிறது" என்று கூறினுன் யூதன் பேஜின்

"அது நிச்சயம் நடக்கக்கூடியது தான்?' என்முன் சைக்ஸ்.

"நான் என்ன பயப்படுகிறேன் என்முல் அது எங்களையெல்லாம் மாட்டிவிடுவதாய் இருந்தால் உனக்குத்தான் மிகமோசமாக இருக்கும் தெரியுமா" என்முன் யூதன்.

"மாஜிஸ்ரேட் காரியாலயத்தில் என்ன நடந்தது' என்பதை யாரும் கண்டுபிடித்தாகவேண்டும். அவன் ஏதும் சொல்லிக்கொடுக்காமல் குற்றவாளியாகக்காணப்பட்டிருந்தால் மீண்டும் அவன் வெளியில் வரும் வரை பயப்படத்தேவையில்லை. பிறகு அவனைக் கவனித்துக்கொள்ள வேண்டும். எப்படியாகிலும் அவனை மடக்கிப்பிடித்துவிட வேண்டும்" என்று கூறினுர் சைக்ஸ்

பேஜின் தலையசைத்தான்.

## வலையில் சிக்கினுன்

ஒலிவர் ருவிஸ்ட் புத்தகசாலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். முதியவர் பிரவுன்லோவின் அன்பையும் அவர்தன் அருகிலேயே இருக்கிருர் என்பதையும் நினைந்து மகிழ்ச்சியோடு போய்க்கொண்டிருந்த அவனை ஒரு இளம் பெண்ணின் அழுகையும் கூச்சலும் திடுக்கிட வைத்தது. "அடே தம்பி!" என்று அவள் கத்தவும் அவன் தலையை தூக்கிபார்ப்பதற்குள் அவனை அவள் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

"என்னைவிடு, நீயார் ஏன் என்னை தடுக்கிருய்' என்று கத்தினுன் ஒலிவர்.

அதற்கு பதிலாக அவள் மேலும் அதிகமாக அழுது

9

அரற்றி கூச்சலிட்டு அவனை அணைத்துப் பிடிக்கலானுள். இதற்குள் அங்கு குழுமிவிட்ட பெண்களும் மற்றவர்களும் விஷயத்தை வினவ. "இவன் ஒருமாதத்துக்கு முன் வீட்டிலிருந்து ஓடிவிட்டான். இவனுடைய பெற்ருேர் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இவன் எங்கோ கெட்டவர்களுடன் சேர்ந்துகொண்டு வீட்டுக்கு வராமல் இருக்கிருன். திருடவும் பழகிவிட்டான். இவன் தாயாரின் மனத்தையே உடைத்துவிட்டான்" என்று புலம்பினுள் அதைநம்பிய அவர்கள்' 'வீட்டுக்குபோ" என்று அவனை மிரட்டினுர்கள்.

"மாட்டேன், இவளை எனக்குத்தெரியாது, எனக்கு சகோதரி எவரும் இல்லை. அம்மா அப்பாவும்கூட இல்லை. நான் ஒருஅனுதை. என்றுஅழுதான் அவன்.

"பார்த்தீர்களா, என்ன மாதிரி தைரியமாகப் பொய் சொல்லுகிருன்." என்முள் அந்தப்பெண்.

அதற்குள் அவள் யார் என்பதை புரிந்துகொண்ட ஒலிவர் "நீநான்ஸி இல்லையா" என்று கேட்டான்

"பார்த்தீர்களா என்னை அவனுக்குத் தெரிகிறது, அவனுல் மறைக்க முடியாது, வீட்டுக்கு வரச்சொல்லுங்கள்" என்று கதறினுள்.

இந்தக்கட்டத்தில் பயங்கரமான முகபாவங்களையுடைய பில்சைக்ஸ் அங்கு வந்து சேர்ந்தான். அவனுடைய நாயும் கூடவே வந்தது.

ஒலிவரைப் பிடித்து அவன் மனம் போனபடி அடித்து உலுப்பினுன். இருட்டிக் கொண்டுவந்தது. எவரும் உதவிக்கு வருவதாக இல்லை அதனுல் எதிர்த்துப்போராடுவதில் பலனில்லையென்று ஒலிவருக்கு தோன்றியது அதற்குள் அவனை வலுக்கட்டாயமாக பிடித்து இழுத்துக் கொண்டு இருள்சூழ்ந்த ஒழுங்கை வழியாகக் கொண்டு போனுர்கள். அவன் அழுது புலம்பியதெல்லாம் பயனற்றுப்போயிற்று.

★

இதே சமயம் பிரவுண்லோ வீட்டில் திறந்த கதவின் அருகில் நின்று திருமதி பெட்வின் ஒலிவருக்காக ஆவலுடன் காத்திருந்தாள் வீட்டு வேலைக்காரன் வீதியில் மேலும் கீழும் 20 தடவைகளுக்கு மேல் ஓடி ஒலிவரைக்காணுமல் களைத்துப் போனுன்.

அந்த இரு முதிய நண்பர்களும் தொடர்ந்தும் தமது அறையில் கடிகாரத்துடன் அமர்ந்து ஒலிவருக்காக காத்திருந்தார்கள்

ஒலிவரைப் பிடித்துக் கொண்டு போனவர்கள் அசுத்தமான ஒரு ஒழுங்கையில் திரும்பி பழைய புடவைகள் விற்கும் கடைகளைக் கடந்து சென்முர்கள். பில்சைக்கின் நாய் அவர்களுக்கு முன்பாகவே ஓடி ஒரு பழைய கடையின் முன் நின்றது. மூடிக்கிடந்த அக்கடையின்வாயிலில் "வாடகைக்கு விடப்படும்" என்ற பலகை தொங்கிக் கொண்டிருந்தது. அது பலவருடங்களாக அப்படித் தொங்கவிடப்பட்டதுபோல் காணப்பட்டது

சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்ட பில்சைக்ஸ் "எல்லாம் சரி" என்முன். நான்ஸி ஜன்னல்களுக்கு கீழே குனிந்தாள்-மணி ஒன்று அடிக்கப்படுவது ஒலிவரின் காதில் விழுந்தது,

அடுத்த பக்கத்துக்கு நழுவி ஒரு வெளிச்சத்தின் கீழ் சிறிது நின்முர்கள். ஒரு சிறு யன்னல் மெதுவாகத்திறந்தது. பின்னர் முற்முக்த் திறந்துகொண்டது. சில விஞடிகளில் கதவும் திறந்தது. பயந்துநடுங்கிக்கொண்டு நின்ற பையனை பில்சைக்ஸ் கட்டைக் கழுத்தில் பிடித்து இழுத்தபடி உள்ளே நுழைந்தான்-மூவரும் உட்புகுந்தபின் கதவைத்திறந்தவன் அதைச் சாத்தித் தாழிட்டான்.

"பேஜின் இங்கே இருக்கிருஞ" என்று கேட்டான் சைக்ஸ்.

"ஆம்" என்று பதிலளித்த மற்றவன் உங்களைக் கண்டதும் சந்தோஷப்படுவாஞ! இல்லை இல்லை" என்று கிண்டல் செய்தான்.

இந்தப்பேச்சின் சாயலும் குரலும் ஒலிவருக்கு மிகபரிச்சயமானவை.

உண்மையில் அதுவேறு யாருமில்லை. ஜெக் டாக்கின்ஸ் என்ற ஆட்புல் டொஜர்தான் அவன்.

டொஜர் ஒரு மெழுகுதிரியை கொளுத்திக்கொண்டு அவர்களை உள்ளே அழைத்துச்சென்முன். பின்பக்கமாக இருந்த அறையொன்றைத் திறந்து கொண்டு உள்ளே சென்றபோது அங்கே பலத்தசிரிப்பு அவர்களை வரவேற்றது. சிரித்தது யாருமில்லை. மாஸ்டர் பேட்ஸ்தான் சிரித்தவன்.

"அவனைப்பாருங்கள்பேஜின் நல்ல தமாஷாகவிருக்கிறது — என்னுல் தாங்கமுடியவில்லை" என்று கூறிவிட்டு விலாவெடிக்கச் சிரித்தான் அவன்.

யூதன் ஒலிவரை ஏதோ மரியாதை செய்வது போல் பல தடவைகள் குனிந்து வரவேற்முன் அதற்குள் டொஜர் ஒலிவரின் சட்டைப் பையில் கிடந்த பணத்தை ஜேப்படி செய்துவிட்டான்.

ஒலிவரின் பக்கெட்டிலிருந்து 5 டாலர் நோட்டு வெளியில் வந்ததும் பேஜின் அதனைக் கைப்பற்றிக் கொண்டான்.— அதற்குள் "அது என்னுடையது" எனக் கூறிக்கொண்டு பணத்தைத் தன்னிடம் தரும்படி பில்சைக்ஸ் முன்னே வந்தான்;

"இல்லை இல்லை அது என்னுடையது நீ புத்தகங்களை வைத்துக்கொள்" என்று பேஜின் கூற "அது என்னுடையதில்லை என்முல் —எனக்கும் நான்ஸிக்கும் கிடைக்கவில்லையென்முல் நான் பையனைத் திரும்பக்கொண்டுபோய் விட்டு விடுவேன். என்முன் பில்சேக்ஸ்.

"இது சரியில்லை, நிச்சயம் சரியில்லை. என்ன சொல்கிருய் நான்ஸி?'" என்முன் யூதன்.

"சரியோ இல்லையோ, அதை கொடுத்துவிடு ஆமாம்சொல்லிவிட்டேன், எனக்கும் நான்ஸிக்கும் வேறு சோலி இல்லை. உன்னுல் பொலிசில்மாட்டிக்கொள்ளும் ஒவ்வொரு பையனையும் திரும்பப் பிடித்துக்கொண்டு வருவதில் தான் எங்கள் நேரத்தைக் கழிக்கவேண்டும் என்று நினைக்கிருயா" என்று கேட்டான் சைக்ஸ். இவ்வாறு பேசியபடி பேஜின் கையிலிருந்த டொலர் நோட்டை சைக்ஸ் பிடுங்கிக்கொண்டான்.

(தொடரும்)

## அரச சபையில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பெரேரா அவர்களுடைய முயற்சியால் கௌரவ அங்கத்தவர் பலர் ஓரிடத்திற்கூடினுர்கள். அக்கூட்டத்தில் மந்திரிமார் தெரிவைப்பற்றிய பேச்சுவந்தபோது தமிழ்த்தலைவர் ஒருவர் எழுந்து "ஜயத்திலகாவும் சேனநாயகாவும் மந்திரிமார் சபையில் இடம்பெறலாகாது" என்று முழுமூச்சுடன் பேசினுர் அதனுல் அக்கூட்டம் வெறுப்புணர்ச்சியுடன் குலைந்தது அது நிற்க.

"இரண்டாம் அரசாங்க சபை அங்கத்தவர் முறையாகக்கூடிய கூட்டத்தில் நிர்வாக சபை தோறும் தலைவர் தெரிவு நடைபெறலாயிற்று. அதிலே முன் செய்து கொண்ட ஏற்பாட்டின் வண்ணம் மந்திரிமார் எல்லோரும் சிங்களவராயே தெரியப் பெற்றனர் ஓரின மந்திரிமார் சபை என்றும் சர்வ சிங்கள மந்திரிமார் சபை என்றும் வழங்கிய அம் மந்திரிமார் சபை வேண்டுமென்றே திட்டமிட்டுத் தெரியப்பட்டது என்று கௌரவ ஜயத்திலகா பின்னர் பெருமையோடு கூறினுர். அத்தகைய தேர்வுக்கும் தமிழ்த் தலைவர் ஒருவரே வழிவகுத்துக்கொடுத்தார் என்பதும் நாளடைவில் தெரியவந்தது. அன்றி அத் தமிழ்ப் பெரியாரும் பிற்காலத்தில் தாம் வழி வகுத்ததைப் பற்றி எழுதியும் பேசியுமுள்ளார்.

### தமிழ்க்காங்கிரஸ் கட்சி உதயம்

அரசாங்க சபையில் தமிழ் மக்களுக்குச் சமபலப் பிரதிநிதித்துவம் கோரி வாதாடிய திரு ஜி ஜி பொன்னம்பலம் இங்கிலாந்துக்கும் சென்று குடியேற்ற மந்திரியாரையும் சந்தித்தார். ஆயினும் அவரது முயற்சி வெற்றி பெற முடியாமல்ப் போயிற்று

இலங்கைத்தீவின் ஆட்சிப் பொறுப்பைப் பெருமளவு இலங்கை அரசிடமே ஒப்படைக்க வேண்டும் என்ற கருத்தை பிரிட்டன் 1944 - ஆம் ஆண்டளவில் ஏற்றுக் கொண்டது. ஆட்சிப் பொறுப்பு மாற்றத்தைக் கொண்டுவரும் வழிகளை ஆராயச் சோல்பரிப் பிரபுவின் தலைமையில் ஓர் ஆணைக்குழு இலங்கைக்கு அனுப்பப் பட்டது. சோல்பரி ஆணைக்குழு 1944 - ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்தது. இலங்கையைச் சுற்றிப் பார்த்தது. இலங்கை மக்களிடமும் மக்கள் தலைவர்களிடமும் கருத்துக்களைக் கேட்டது.

1944ம் ஆண்டு கார்த்திகை மாதம் அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ்கட்சி அமைக்கப்பட்டது. இதன் தலைவராக திரு. கணபதிப்பிள்ளை காங்கேயர் பொன்னம்பலம் இருந்தார் தமிழர்கள் சோல்பரி ஆணைக்குழுமுன் திரு. பொன்னம்பலம் தலைமையில் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

### ஜி. ஜி.யின் தலைமையுரை

1944ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ஆந் தேதி அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் முதலாவது மாநாட்டில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையுரை ஆற்றினுர். கூட்டம் கொழும்பு நகர மண்டபத்தில் நடைபெற்றது. அவர் ஆற்றிய உரையின் சில வரிகள்.

"...... இலங்கைக்கு நாங்கள் அடிமைகளாக வரவில்லை. உரிமைகொண்ட ஆட்சியாளர்களாக வந்தோம். எமது நிலத்தில் நாம் உரிமை கொண்டாடிக்குடியேறினேம். இதை நான் நினைவு படுத்துகிறேன். தமிழர்கள்தான் இந்தந்தீவின் ஆதிக்குடிகள். இதை எமது (சிங்கள) நண்பர்கள் தெரிந்து கொள்ளவேண்டும். பருத்தித்துறைமுதல் தேவேந்திர முனைவரை ஆட்சி செய்த அரசை நாம் பெற்றிருந்தோம். இதனை இலங்கையின் வரலாற்றில் காணலாம். ஐரோப்பியக்கடலாடிகள் வரும்வரை நாம் (தமிழர்கள்) அந்நியரால் ஆட்சி செய்யப்படவில்லை. எம்மை நாமே ஆட்சி செய்தோம்" (ஆதாரம் ஈழத்தமிழர் இறைமை)

[மிகுதி அடுத்தவாரம்]

## காவியகாலமும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வியல் முதலியதுறைகள் இன்று நாவல்களில் பெருமளவு இடம் பெறுகின்றன. இதனுல் நாவல்கள் சமுதாயத்தோடும், வாழ்க்கையோடும்- தனிமனிதனேடும், நெருங்கிய தொடர்புடையனவாகவே விளங்குகின்றன. ஆனுல் காவியம் மங்குதசையடைந்து - தோற்றப்பொலிவையிழந்து வீழ்ச்சியுறறுவிட்டது. இதனுல் நாவலே வாழ்க்கையை நோக்கும் பணியில் அதன்கரு; பாத்திர வார்ப்பு; மொழி நடை; வர்ணனை, ஆசிரியரது உலகானுபவம்; அவரது வாழ்க்கைத் தத்துவம்; நுணுக்க விபரங்கள்; புதுமைச்செறிவு; மானஸிக உணர்வுபோன்ற கலையம்சங்கள் போன்றவற்றினுல் சமுதாயப்பணியைச் செய்வதில் பெருவெற்றியடைகின்றது என்று கூறுவதில் தவறில்லை.

## காத்திருப்பு

நுளம்புகள்
கும்பலாய்
முகத்தை மொய்க்கும்
முதுகிலோ
கழுத்திலோ
சிற்றெறும்பு
உளர்த்து கடிக்கும்
கூரையிலிருந்து
பூச்சி ஏதும்
காதுக்குள் விழுந்து
குருகுருக்கும்
என் நித்திரை முறியும்
கனத்த இருளிலும்
சொந்த வீட்டில்
பாது காப்பாக
படுத்திருக்கும்
உணர்வு எழும்
எங்கோ தொலைவில்
கோயிற் திருவிழா
பாட்டுகள் கேட்கும்
மீண்டும்
நிம்மதியாய்
நித்திரை வரும்
இது
முன்னெருகாலம்
இப்போது —
முறிந்த நித்திரை
திரும்பி வர
காலம் எடுக்கும்
கனிகள்
பீதியில்
இருளைத்துழாவும்
கும்மிருட்டிலே
பிணந்தின்னும்
கழுகுகளின்
துப்பாக்கிக் கண்கள்
அண்மித்து வருவதால்
மயிர் சிலிர்க்கும்
ஓநாய்கள்
ஓலமிடும்
படலையடியில்
பாரமான
சப்பாத்து மிதிப்புகள்
நெஞ்சில் உதைக்கும்
பிரதான வீதியிலே
உச்சிச் சாத்தானின்
ஏவற் பிசாசுகள்
ஏறித்திரியும்
இயந்திரப் பன்றிகளின்
நாசகார உறுமல்கள்
நரம்புகளில் அதிரும்
மனத்துள்ளே
மரணபயம்
மௌனமாய்க்
கால் நடக்கும்
விழித்திருக்கும் நெஞ்சம்
பலதையும் யோசித்து
தனக்குள்ளே
பதற்றப்படும்
ஆயினும்
ஜீவாத்மா
தியாகத்திற்காய்
தயாராக
விடியலுக்குக்
காத்திருக்கும்.

—யோ. பெனடிக்பாலன

## முன்னணி கண்டனம்

(சென்னை)

இலங்கையில் தமிழர்கள் பாரம்பரியமாக வசித்துவந்த வடக்கு, கிழக்கு பகுதிகளில் ஆயுதம் ஏந்திய சிங்களவர்களை குடியமர்த்தும் இலங்கை அரசின் திட்டம் இலங்கைத் தமிழ் மக்களை நாட்டின் சகல பகுதிகளிலும் சிறுபான்மை மக்களாக ஆக்கும் ஒரு நடவடிக்கையாகும்'' என்று தமிழீழ விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த முன்னணியினர்நேற்று சென்னையில் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இலங்கை அரசின் மேற்படி நடவடிக்கைக்கு கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

''தமிழ் மக்களை அவர்கள் பாரம்பரியமாக வாழும் சொந்த மண்ணிலிருந்து வேருடன் களையும் திட்டமே இதுவாகும். இது சொந்த மண்ணில் தமிழர்களை சிறுபான்மையினராக்கி அவர்களை அழித்தொழிக்க முயலும் ஒரு திட்டமாகும்'' என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (சூ)

## அழுத்கமவில் நேர்முகப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

வடபகுதியிலுள்ள பலாலி கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரிய மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை அழுத்கமவில் இம்மாதம் 31ம் திகதி நடைபெறவுள்ளது

கொழும்பிலிருந்து சுமார் 42 மைல்களுக்கு அப்பாலுள்ள அழுத்கமவிற்கு இன்றைய சூழ்நிலையில் அழைத்திருப்பது குறித்து பயிற்சி மாணவர்கள் கவலையும் அதிருப்தியும்அடைந்துள்ளனர். [மா]

## செட்டிகுளம் கொலை வழக்கு

(வவனியா)

செட்டிக்குளம் முகத்தான் குளம் மா. மோகனராஜா கொலை வழக்கில் முதலாம் சந்தேகநபரான வல்வெட்டித்துறை கம்பர்மலை வாசியான கி. குணசேகரம் பிள்ளையை ஐயாயிரம் ரூபா பிணையில் விடுதலை செய்யும்படி வவனியா நீதவானுக்கு வவனியா மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஜே ஜி ஆசிர்வாதம் அறிவித்தல் அனுப்பியுள்ளார்.

## கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக உப தபாலகத்தில் நற்று இனந்தெரியாதவர்களால் 4000 ரூபா பணம், முத்திரைகொள்ளையடிக்கப்பட்டது பத்து பேர் சென்று உபதபால் அதிபரை பயமுறுத்தி இக்கொள்ளையை நடத்தியதாக கூறப்படுகிறது. (க)


றீகல் மினி

தினசரி 10-15, 1-30 மட்டும்.

சிவாஜி - ஜெமினி - பத்மினி நடிக்கும்

வீரபாண்டிய கட்டப்பொம்மன்

(கலர்)

லிடோ சினிமா

தினசரி 10-30 2-00

MISSION BATANGAS

(War Film - Action packed)

வெலிங்டன்

(யாழ். நகர்

10-30, 2-15

கமல் - மாதவி

டிக் டிக் டிக்

(கலர்)


## வயலுக்குள் புதைக்கப்பட்டிருந்த
# இளம் பெண்ணின்சடலம்!

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி பிஞக்கை வயல் வெளியில் புதைகுளியிலிருந்து சுமார் 32 வயதுள்ள பெண்ணின் சடலம் பொதுமக்களால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

நிர்வாணக் கோலத்தில் மீட்கப்பட்ட இப்பெண்ணின் தலையில் காயம் ஒன்றிருக்கக் காணப்பட்டது.

வயல்வெளிக்குச் சென்ற சில விவசாயிகள், புதைகுழியிலிருந்து ஒரு கை மேலே தெரிவதைக்கண்டு, குழியைத் தோண்டிப் பார்த்தபொழுது ஆடை எதுவும் இன்றி பெண்ணின் சடலம் இருக்கக் கண்டதாகவும், பின்னர் அச்சடலத்தை வெளியில் எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் குழியிலிருந்து வெளியே எடுத்ததும் புதைக்கப்பட்டிருந்த குழியிலிருந்து மழை நீர் தேங்கியது. அந்த நீர் இரத்தம் கலந்த செந்நீராகக் காட்சியளித்தது.

இறந்த பெண்ணின் தலையில் காணப்படும் காயம் துப்பாக்கிச் சூட்டுக்காயமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இப்பெண்ணின் சடலத்தைப் பார்வையிட்ட பொது மக்களில் சிலர், பலாலியில் ஸ்ரூடியோவில் கடமையாற்றும் ஈஸ்வரி என்றழைக்கப்படுபவராக இருக்கலாமென்றும், ஆண்குழந்தை ஒன்றுக்குத் தாயான இப்பெண்ணின் கணவரான ஸ்ரூடியோ உரிமையாளர் பல மாதங்களுக்குமுன்னர் திடீரெனக் காணமல் போய்விட்டார் என்றும் பேசிக் கொண்டனர்.


குறிப்பிட்ட ஸ்ரூடியோ பலாலி விமான நிலையத்துக்கு அண்மையில் இருப்பது குறிப்பிடத்தக்கது (மா)

# அண்ணலார்மணிமொழிகள்

இந்திய சுதந்திர வேட்கை உலகுக்கு வழங்கிய பெரும் பொக்கிஷம் மகாத்மா காந்தியடிகள்.

சுதந்திர நாடாகி இன்று விண்வெளியிலும் சிறகடித்துப் பறக்கிறது இந்தியக் குடியரசு. இக்குடியரசு 35 ஆண்டுகளைப் பெருமையுடன் வீறு நடைபோட்டுப் பூர்த்திசெய்துவிட்டது. இக்காலப் பகுதியில் இந்தியா பெற்ற வெற்றிகள், படைத்த சாதனைகளுக்கு 'அண்ணல் காந்தி'யென்ற மனித வடிவம் பெற்ற மாபெரும் சக்தி உதிர்த்த போதனைகளே உரமாக விளங்கியுள்ளன.

அந்த மகானின் மணிமொழிகளில் சிலவற்றை நினைவுகூருவதன் மூலம் புத்துணர்ச்சியைப் பெறுவதுடன், எதிர்வரும் 30ம் திகதி அவரின் 37-வது நினைவுக்கு அஞ்சலியும் செலுத்தும் பாக்கியம் கிட்டுகின்றது.



★

கடவுளிடம் முழு நம்பிக்கை கொண்டதால் மதத்தின் பெருமையையும் இந்தியசமுசம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது. எங்கே சத்தியம்இருக்கிறதோ, எங்கே மதமும் இருக்கிறதோ அங்கே மாத்திரமே வெற்றி உண்டு.

★

சாத்வீக எதிர்ப்பு மிகப் புனிதமான மிகச் சிறந்த படிப்பு. குழந்தைகளுக்குச் சாதாரணமாக எழுத்துப் படிப்புக்கு முன்னாலேயே இப்படிப்பு வரவேண்டும். ஒரு குழந்தை, எழுத்துக்களை எழுத ஆரம்பிப்பதற்கு முன்னால், உலக அறிவைப்பெற ஆரம்பிப்பதற்கு முன்பு ஆத்மா என்பது என்ன; ஆத்மாவுக்கு இருக்கும் சக்திகள் யாவை என்பதை அறிய வேண்டும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

★

பிரிட்டிஷ் ஆட்சிக்குப் பதிலாக நாளைக்கு நாகரிக முறைகளை அடிப்படையாகக் கொண்ட இந்திய ஆட்சி ஏற்படுமாயின் இங்கிலாந்துக்குக் கொண்டு போகப் படடு வந்த பணத்தில் கொஞ்சம் மிச்சமாகும் என்பதைத் தவிர எந்த விதத்திலும் இந்தியா மேம்பட்டுவிடாது. ஆனால் அப்பொழுது ஐரோப்பா அல்லது அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டாவது அல்லது ஐந்தாவது நாட்டைப்போன்ற ஒரு நாடாகவே இந்தியா இருந்திருக்கும்.

★

சமயக்கொள்கையில் எனக்கு பற்று உண்டு. இந்தியா மத விரோதமானதாகிக் கொண்டு வருகிறது. என்பதே எனது முறையீடு இந்து முஸ்லீம் அல்லது ஜோராஸ்த்ரியம் என்ற வகையில் நான் சிந்திக்கவில்லை எல்லா மதங்களுக்கும் அடிப்படையான மதத்தைப்பற்றியே எண்ணுகிறேன்.

★

போராட்டம் இல்லாதிருந்தால் இந்திய சமுகத்திற்கே பெரும் பொக்கிஷம் போன்றவர்களும் எந்தசமூகத்திற்குமே பெரியமதிப்பை உண்டாக்கக் கூடியவர்களுமான ஆண்களும் பெண்களும் தமிழரிடையே இருக்கிறார்கள் என்பதை இந்திய சமூகம் அறியாமலேயே இருந்திருக்கும்.

★

ஒரே இடத்திற்கு போய்ச் சேருவதற்கான பல வழிகளே மதங்கள் அடையப்போகும் இலட்சியம் ஒன்றாக இருக்கும் பொழுது பலதரப்பட்ட சாலைகளின் வழியாகக் குறிக்கோளை அடைவதில் சச்சரவிட்டுக் கொள்வதற்கு என்ன இருக்கிறது.

★

இரண்டுபேர் சச்சரவுக்கு தயாராக இருந்தால்தான் சச்சரவுக்கே இடம் ஏற்படுகிறது. ஒரு முஸ்லீமுடன் சண்டையிட நான் விரும்பவில்லையென்றால் என்னிடம் சண்டைக்கு வருவதற்கு அவருக்குச் சக்தியே இல்லாமல் போகும், அதுபோல என்னுடன் சச்சரவுக்கு வர ஒரு முஸ்லிம் மறுத்துவிடுவாரானால் நானும் சக்தியற்றவனாகிவிடுவேன்.

★

மரணத்தையே தம் மெல்லணையாக நினைத்து துயில் கொள்ளும் மக்களையுடைய நாடே சிறந்த நாடாகும். சாவுக்கு அஞ்சாதவனை எந்தப் பயமும் எதுவும் செய்ய முடியாது.

★

இறைவனது நண்பனாயிருக்க விரும்புவோன் இவ்வுலகில் தன்னந் தனியனாக இருக்க வேண்டும். இன்றேல் உலகம் முழுவதுடனும் நட்புரிமை கொள்ளல்வேண்டும்.

★

அழியக்கூடிய இந்த உடலை அலங்கரிப்பதற்காகவும், இன்னும் சில நிமிஷங்கள் அதை உயிருடன் வைத்திருப்பதற்காவும் கணக்கற்ற பிற உயிர்ப் பிராணிகளைக் கொல்ல நாம் வெட்கப்படுகிறோமில்லை இதன் முடிவு நம்மைநாமே கொன்று கொண்டு உடலும் ஆன்மாவும் சர்வநாசம் அடைவதே யாகும்.

தொகுப்பு:-

— அனந்த்

# அரசு என்னும் ஆலமரம்வீழ்ந்தது!

சந்தனப் பொன்மேனியும் என்றும் அழியாத புன்னகையும் இனிய பேச்சும் உதவும் சுபாவமும் ஒன்று சேர்ந்த அரஸ்கோ அதிபர் இன்று எம்மிடை இல்லை. அரசரத்தினம் என்ற ஆலமரம் பாறி வீழ்ந்து பழங்கதையாய்ப்போய் விட்டது.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் தொடங்கப்பெற்ற காலத்திலிருந்து அதன் உயிர் நாடிகளாய் விளங்கி வந்த பெரியார்களுள் அமரர் இ. அரசரத்தினம் அவர்களும் ஒருவர். கழகப்பொருளாளராய் விளங்கி அதன் இடரினும் தளரினும் உறுதுணை நின்று அவர் ஆற்றியபணிகளை எமது கழகம் என்றும் நன்றியுடன் நினைவிற்கொள்ளும்.

கழகத்தின் ஒவ்வொரு செயற்பாட்டிலும் அரசரத்தினம் அவர்களின் பங்களிப்புப் பாரியதாகவே இருந்து வந்துள்ளது தொழில்ரீதியான நெருக்கடிகள் நேரமின்மைகள் எவ்வளவோ இருந்த போதிலும்கழக வைபவங்கள் எவற்றிலும் தவறாது கலந்து கொண்டு ஊக்கமும் உற்சாகமும்உறுதுணையும் வழங்கிய பெரியாரின் இழப்பின் தாக்கத்தினைக்கழகத்தினரான நாம் ஒவ்வொரு கணமும் உணர்ந்து கொண்டே இருக்கின்றோம்

அரசரத்தினம் உணர்ச்சிமயமானவர்; கள்ளங்கபடமற்றவர்; தம்முடன் சிலநாட் பழகியவருக்கும் தம்மைக்கரவாது மனந்திறந்து அந்தரங்கம் அனைத்தையும் கொட்டி உறவாடுவது அவரின் வழக்கமாயிருந்து வந்தது பெருந்தயரும் பண்பும் வெளிப்படையான போக்கும் தாராளமனப்பான்மையும் கொண்ட ஒரு நல்லவரை வல்லவரை இழந்து விட்டோம்

முத்தமிழ் வெளியீட்டுக்கழகத்தின் அஞ்சலி அன்னாருக்கு உரியதாகுக அவரின் இழப்பினால் துடிதுடிக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அரசரத்தினம் அவர்களின் ஆன்மா சாந்தியடைக

க. சொக்கலிங்கம்,
(சொக்கன்)
பொதுச்செயலாளர்
முத்தமிழ் வெளியீடடுக்கழகம்.

## 37 வருட சேவை

[கரவெட்டி]

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உடுப்பிட்டி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் பல வருடகாலமாக உதவி ஆசிரியராகக் கடமையாற்றியவருமான திருமதி குணவதி சோமசுந்தரம் தனது 37 வருடசேவையின் பின், இம் மாதம் 8-ந் திகதியன்று ஓய்வு பெற்றார்.

கடந்த 1-11-1946 ம் ஆண்டில் ஆசிரியப்பணியில் காலடி எடுத்துவைத்த திருமதி குணவதி-சோமசுந்தரம் கொழும்பு கண்டி, குருநாகல், வவனியா முதலிய வெளி மாவட்டங்களிலும், பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்திலும் பணி புரிந்துள்ளார்.

## கம்பத்தில் வயோதிபர் சடலம்!

(யாழ்ப்பாணம்)

உரும்பராய் சந்தியில் துப்பாக்கிச்சூட்டு காயத்துடன் ஒரு வயோதிபரின் சடலம் தந்திக்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தது.

கறுப்புநிற சேட்டும், மண்நிற கால்சட்டையும் அணிந்த இந்த வயோதிபரின் சடலம் நேற்று முன்தினம் நண்பகல் யாழ் ஆஸ்பத்திரிக்குகொண்டு வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இன்று நீர்வைக்கந்தன் மணவாழக் கோலம்

# நீர்வையில் மகிமை

தாளம்: ஆதி

பல்லவி

மணவாள மூர்த்தி அருள்புரக்கும் நல்ல
மகிமையை நீர்வையில் காணுமையா (மண)

அனுபல்லவி

கணநாதன் கரிமுகன் வலமேவ
கனக சபாபதியம்மையுடன் மேவும் (மண)

சரணம்

வள்ளி சேவசேனை பதிக்கோலம்
வள்ளல் சடப்பவன பயிற்கூடம்
தெள்ளிய ஞானபண்டிதன் தீர்த்தமும்
திகசெலாம் புகழ்கொண்ட திவ்யதலமுறை (மண)

சரணம்

தெரிதமிழை உதவு சங்கப் புலவனும்
தேவர்தம்பயம் தவிர்த்த தீரனும்
பரவிடும் தமிழர் கொடுந்துயர் துடைத்துயிப்
பாரினை யவர்க்காய்ப்படைத்தின்ப நல்கும் (மண)

— நீர்வை முருகதாஸ்

# டிறைவரும் இறைவனும்

**நா**ட்டின் ஆசிரியர்கள் அனைவருக்கும் இம்மாதம் தொடக்கம் மாதம் 190 ரூபாய் சம்பள அதிகரிப்பு அமுலாகிறது

கல்விச்சேவை முதல் வகுப்பில் உள்ள ஆசிரியர்கள்-பிரபல கல்லூரி அதிபர் போன்றவர்களின் மாதச் சம்பளம் மூவாயிரம் ரூபாவில் தொடங்குகிறது.

நெடுங்காலம் அலட்சியம் செய்யப்பட்ட விடயம் இன்று கணிசமான அளவிற்கு கவனிக்கப்பட்டுள்ளது.

சமுதாயம் சம்பளத்தில், வருமானத்தில் மதிப்பை வைத்திருக்கிறது; கல்யாணச்சந்தையில் மாதச் சம்பளம் என்ன, வெட்டுக்கொத்து வசதியுண்டா என்ற விடயங்கள் இன்றும் விவாதிக்கப்படுகிறது.

எனவே அசிரியன் எழுத்தறிவித்தவன் இறைவனாக இருந்தாலும் என்ன பயன்?

சாதாரண இ.போ.ச டிறைவர் 'இறைவனிலும்' பார்க்க கூடிய சம்பளம் வாங்குவது உண்மை; அந்த அளவில் சமூக மதிப்பும் பாதிக்கப்படும் என்று அஞ்சவும் இடமுண்டு.

இது ஒரு குழப்பமான கருத்து. 'இறைவனு'க்குச் சம்பளம் கூட்டவேண்டுமென்று குழப்பமும் கும்மாளமும் போடலாம் ஆனல் டிறைவர் - இன்றைய டிறைவர் பணக்கலக்கமுடையவராளுல் இறைவனின் மூன்ருவது தொழிலான அழித்தல் என்பதில் ஈடுபடலாம்.

உயிரைப் பாதுகாப்பது டிறைவரின் பெரும் பொறுப்பு. அந்த உயிரின் உள்ளறிவை வெளிப்படுத்திப் பண்ணுவது ஆசிரியனின் பொறுப்பு; எனவே இன்றைய ஆசிரியசம்பள அதிகரிப்பில் அர்த்தம் உண்டு.

## ராணுவம் சுட்ட..

1ம் பக்கத்தொடர்ச்சி...

ருந்தபோதே இராணுவத்தினர் இவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

திருமலை பகுதி நீதவான் என். கே. செல்வராசா பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மரணவிசாரணை நடத்தி பிரேதபரிசோதனையின் பின்னர் பொலிசாரிடம் சடலங்களை ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

## யாழ். ஹற்றன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ரொக்கப் பணம் வைக்கப்பட்டிருந்த இரும்புப் பெட்டியையும், பொது மக்களின் நகைகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த லொக்கர்'களையும் காஸ்சிலிண்டர்கள் மூலம் உடைத்துத் தள்ளினர் உடைந்த லொக்கர்களுக்குள் இருந்தலட்சக்கணக்கான ரோய் பெறுமதியான நகைகளையும், பணத்தையும் அள்ளிக்கொண்டார்கள்.

பத்து மணிநேரம் வங்கிக் கட்டடத்துக்குள் இருந்து, இந்தத் துணிகரக் கொள்ளையை நடாத்தியுள்ள விபரங்கள் வெளி வந்துள்ளன.

பல லட்சம் ரூபாய் நகைகளும் 60 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக தகவல் ஒன்று தெரிவித்தபோதிலும், உத்தியோகபூர்வமான விபரங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

இக் கொள்ளையின் போது தொலைபேசித்தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது

அறைக்குள் பூட்டிவைக்கப் பட்டிருந்த 5 பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் கொள்ளை நடாத்தியவர்கள்கட்டடத்தை விட்டு வெளியேறிய போது விடுவித்துவிட்டுச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பணம் பஸ் நிலையத்துக்கு முன்பாக, ஆஸ்பத்திரி வீதியில் இந்த வங்கிக்கட்டடம் அமைந்துள்ளது

## இன்று

[யாழ்ப்பாணம்]

அச்சுவேலியில் பிரஜைகள் குழுவை அங்குரார்ப்பணம் செய்வதற்கான கூட்டம்இன்று அச்சுவேலி கிராம சேவையாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## கல்லாறு வாவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லது சுடப்பட்டு சடலங்கள் வாவியில் வீசப்பட்டிருக்கலாம் என்று பெற்ருேர்கள் கருதுவதினுல் தற்போது அவர்கள் வாவியில் சடலங்களைத் தேடிவருகின்றனர்

மட்டக்களப்பு கோட்டைக் கல்லாற்றில் கடந்த வியாழக்கிழமை பொலிஸ் அதிரடிப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான மேலும் மூன்று இளைஞர்களின் சடலங்கள் கோட்டைக் கல்லாறு வாவியல் நேற்று கரைஒதுங்கியுள்ளன

செல்லத்தம்பி செல்லக்குமார், புவனப்பிள்ளை இராமநாதன், அரசரத்தினம் மனோகரன் ஆகிய மூவருமே இந்த இளைஞர்களாவர் இவர்களின் சடலங்கள் வாவியில் இருந்து மீட்கப்பட்டு அக்கிராம மக்களினுல் அடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த துப்பாக்கிச் சூட்டில் பலியாகி நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 4 இளைஞர்களின் சடலங்களும் தற்போதும் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது

இதனிடையே மட்டக்களப்பு துறை நீலாவணை என்ற கிராமம் நேற்று அதிகாலை அதிரடிப் பொலிசாரினுல் சுற்றிவளைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது இடையிடையே துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றதாகவும் சிலர் உயிருழந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது இச் சோதனைகளின் போது 18 வயதிற்கும் 35 வயதிற்கும இடைப்பட்ட சுமார் 200 இளைஞர் அதிரடிபடையினரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## கிளிநொச்சியில் கொள்ளை

(கிளிநொச்சி)

கனகாம்பிகைக் குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையில் கடந்த இரவு இனந்தெரியாத நபர்கள் பெருமளவிலான உணவுப் பொருட்களைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளனர்.

## டென்மார்க்கிலிருந்து நிதியுதவி

[யாழ்ப்பாணம்]

வடக்கு - கிழக்கு மாகாணங்ளில் அசதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரண உதவியாக, டென்மார்க்கில் வாழும் தமிழ் மக்கள் 23ஆயிரம் ரூபா அனுப்பிவைத்துள்ளனர்.

யாழ். ஆயர் இல்லத்திற்கு இப்பணம்அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

''நாங்கள்இங்கு நாடுகடந்து வந்திருந்தாலும் தமிழ் மக்கள் மீது அக்கறையும் பாசமும் வைத்துள்ளோம்'' என்று அவர்கள் காசோலையுடன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளனர். (மா)

## வல்லை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்கனவே வல்லை மதகு ஒன்று குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டு, பின் இளைஞர்களினுல் சீரமைக்கப்பட்டு, தற்போதைய சம்பவத்தினுல் போக்குவரத்து நடந்தது. தொண்டமாஞறு தற்காலிக ராணுவ முகாமைத் தாண்டியே வடமராட்சிப் பிரயாணிகள் செல்லவேண்டியுள்ளனர்.

## பிரிட்டிஷ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர்காமினி திசநாயக்கா தெரிவித்துள்ளார்.

விக்ரோறியா திட்டம் பிரிட்டனின் உதவியினுல்நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

இலங்கை நிலைமை காரண சென்ற ஆண்டு அவர் மேற்கொள்ளவிருந்த பயணத்தை நிறுத்தியிருந்தது தெரிந்ததே.

## வடக்கில் உணவு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. இந்த ஆபத்தான நிலைமையை தவிர்ப்பதற்கு தேவையான உணவுப்பொருட்கள் இங்கே கொண்டு வரப்பட வேண்டும் என்ற அவசியம் பலதரப் பட்டவர்களாலும் உணரப் பட்டிருக்கிறது.

உணவுப் பொருட்களை வாங்குவதற்காக பெண்கள் தங்கள் ஆபரணங்களையும் விற்று வருகிருர்கள் ஆயிரக் கணக்கான மக்கள் குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் இந்தியாவுக்கும், ஐரோப்பிய நாடுகளிலும் தஞ்சம தேடிச் சென்றிருக்கிருர்கள் ஆயிரக் கணக்கான இளைஞர்கள்ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு ராணுவ முகாம்களில் வைக்கப்பட்டிருக்கிருர்கள் இந்த இளைஞர்கள் எங்கே இருக்கிருர்கள் என்ற விபரம் அவர்களுடய பெற்ருேர்க்கே தெரியாமல் இருக்கிறது.

★ ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தபபட்டிருப்பதும், போக்குவரத்துக்காக 'பெர்மிட்' முறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டிருப்பதும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருககின்றன.

★ மூலப் பொருட்கள் இல்லாத காரணத்தால் பல தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன கடைகளுக்கும் வியாபாரம் இல்லாத காரணத்தால் இதே நிலை ஏற்பட்டுவருகின்றது. பாதை வழியாகக் கொழும்பிலிருந்து பொருட்களைத் தருவிக்க முடியத நிலை ஏற்பட்டிருக்கிறது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் பிராணவாயு, அனெஸ்தடிக்ஸ் மற்றும் முக்கிய மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

பரீட்சைக்குச் செல்லும்

## பேராதனை மாணவர்க்கு போக்குவரத்து வசதி

[யாழ்ப்பாணம்]

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இறுதி ஆண்டுக்கான பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் யாழ் மாவட்டத்திலுள்ள மாணவர்களுக்கு பாதுகாப்புடனை போக்கு வரத்து வசதி செய்து கொடுப்பதற்கு யாழ் அரசாங்க அதிபர் முன்வந்துள்ளார்.

அடுத்தமாதம் 9ம், 10ம்திகதிகளில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களின் பெற்ருேரைக் கொண்ட குழு ஒன்று யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தைச் சந்தித்து பாதுகாப்பான போக்குவரத்து வசதி செய்துதரும்படி வலியுறுத்தியிருந்தது

பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களின் தொகையையும் உத்தேச பயணத் திகதியையும் தம்மிடம் சமர்ப்பித்தால் பாதுகாப்புடனை பஸ் போக்குவரத்து வசதியை செய்துதர முடியும் என்று அவர் உறுதியளித்தார்

## தொழிற்சங்க..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எந்த ஒரு தொழிற்சங்கமும் தாம் விரும்பியவாறு பட்டியல் தயாரிக்க அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இடமாற்றப் பட்டியல் தொடர்பாக ஏதேனும் விபரங்கள் தேவைப்படின் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

## பாதிக்கப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வையாளர் ளின் பல்வேறு பிரச்னைகள் குறித்தும் விரிவக ஆராயப்படும் என்று அரச நில அளவையாளர் சங்க உதவிச் செயலாளர் திரு. கு. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

## யாழ். பிரஜைகள்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுக் குழுவின் அழைப்பாளர் என்ற முறையில் யாழ் பிரஜைகள் குழு செயலாளர் சட்டத்தரணி ஆர் பாலசுப்பிரமணியம் ஜனதிபதி, பிரதமர். பந்தோபஸ்து அமைச்சர் ஆகியோருக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள மகஜரில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தமிழ் மக்களை இந்நாட்டு பிரஜைகள் அன்றி நடத்துவது போன்றுள்ளது. தற்போது வடபகுதியில்மோசமான நிலை உருவெடுத்துள்ளமையினுல் விரைவில் இங்கு சிவில் நிர்வாகத்தை அமுல் நடத்தி மக்களின் வழமையான வாழ்க்கைக்கு அரசாங்கம் வழி அமைத்துக் கொடுக்க வேண்டும்'' என்றும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (சு)

## தகர்ப்பு

(யாழ்ப்பாணம்)

வல்லை ஆஸ்பத்திரியில் எஞ்சியிருந்த 5 விடுதிகளும், குண்டு வைத்து தகர்க்கப் பட்டுள்ளன ஏற்கனவே இங்கு கட்டடங்கள் தகர்க்கப்பட்டது தெரிந்ததே

## காங்கேசன்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டர்சள் இனந்தெரியாத இளைஞர்களினுல் துப்பாக்கி முனையில் நேற்றுக்காலை கொள்ளையடித்துச் செல்லப் பட்டன.

## மோட்டார் சைக்கிள் எரிக்கப்பட்டது

(கல்வியங்காடு)

நடந்து வந்து கொண்டிருந்த ராணுவத்தினரைக் கண்டதும் தாம் வந்து கொண்டிருந்த மோட்டார்சைக்கிளைப் போட்டுவிட்டு இரு இளைஞர்கள் ஓடி மறைந்தனர். நேற்று கண்டி வீதியிலுள்ள செம்மணி வீதியில் இருந்த இந்த மோட்டார்சைக்கிள் அங்குள்ள ஒரு வளவுக்குள் ராணுவத்தினரால் எரிக்கப் பட்டது.

## மரண அறிவித்தல்

### தேவசகாயம் இராசேந்திரம்

நாவற்குழியூர் தேவசகாயம் இராசேந்திரம் [புகையிரத பென்சனியர்] காலமானுர் அன்னர் எலிசபேத் அம்மாவின் அன்புக்கணவரும், இம்மானுவேல் [C G.R] மேரி மாகிறேற். செல்வராக்கினி, சசீலீயம்மா, மரியரஞ்சிதம், பேரி அஞ்சலீன, ஞானசோதி, அருள்நேசன் [ஜேர்மனி] குணசீலன் [சிங்கப்பூர்] ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியநாதர் [நில அளவைப்பகுதி] திருச்செல்வம் [C G R] யேக்கப் [C.T.B] ஆம்ராசகியநாதர் [சவுதி] எடவேட் அன்ரன் [பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை] மேரியூபிறேஷியா ஆகியோரின் மாமனுரும் ஆவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் பற்றிப் பின்னர் அறிவிக்கப்படும் 1558

## மரண அறிவித்தல்

### சின்னையா குமாரசாமி

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சின்னையா குமாரசாமி காலமாகிவிட்டார் இவர் காலஞ்சென்ற சின்னையா பறுவதம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரரும், ராசலட்சுமியின் அன்புக் கணவரும், செல்விகள் சுதர்ஷினி, [சுனகரத்தினம் மகாவித்தியாலயம்] மதிவதனி [கொழும்புத்துறை, இந்து மகளிர் மகாவித்தியாலயம்] பாமினி [வேம்படி மகளிர் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்வரத்தினம் சோதிராசா, [ஹப்பி ரெக்ஸ்] தர்பலிங்கம் [ஹப்பிரெக்ஸ்] மகாலிங்கம் திருமதி நகுலேஸ்வரி தேவராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற இரத்தினகோபால், அருளம்பலம், கோபாலசிங்கம், காலஞ்சென்ற இராசதுரை, பொன்னுத்துரை, திருமதி செல்லம்மா நவரத்தினம் ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் 27-1-85 ஞாயிறு அரியாலை கண்டி வீதியிலுள்ள அன்னரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு சித்துப்பாத்தி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அறிவித்தல்: சின்னையா சோதிராசா [ஹப்பி ரெக்ஸ்]

1560

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம்ஆண்டு ஜனவரி மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the Genera Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P O Box 49, Telegram Tele phone number 22389-24126.